www.tamilarangam.net


அன்பளிப்பு ரூபாய் இரண்டு

# வீரவேங்கை

ஆசிரியர்: கோவைமகேசன்

சுதந்திர இயக்க வெளியீடு

வள்ளுவராண்டு 2016 - பெப்ரவரி 1985 - உறுமல் எட்டு



பூரண உடல் நலம் பெற்றுத் தாயகம் திரும்பியுள்ள தமிழ் நாடு முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு தமிழீழ விடுதலைக்குப் போராடும் 10 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் வீரவேங்கை தனது நல்வாழ்த்துக்களைக் காணிக்கையாக்குகிறது

# விடுதலைப்புலிகள்–சிங்களஇராணுவம் நேரடி மோதல்!

## 20 சிங்கள இராணுவம் சாவு!

## 2 இராணுவ கவசவண்டி நாசம்!!

சிங்கள சிறீலங்கா அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ள "ஆள் அரவமற்ற" பிரதேசமான தமிழீழத்தின் வடகடலோரமான பொலிகண்டியில் அமைந்திருந்த திரு. வி. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப்புலி இயக்க கொரில்லாக்களின் பாசறையொன்றை சிங்கள இராணுவம் தாக்கிய போது சிங்கள இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடி ஆயுதப் போர் நடைபெற்றது. இரவிரவாக ஐந்து மணி நேரம் நடைபெற்ற இப் போராட்டத்தின் முடிவில் சிங்கள இராணுவத்தினர் இருபது பேர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர். இரண்டு ராணுவக் கவச வண்டிகளும் இரண்டு ராணுவ டிறக்குகளும் அழிக்கப்பட்டன. விடுதலைப்புலிகள் எவரும் எதுவித காயமுமின்றி அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

30-1-85 இரவு 11 மணிக்கு விடுதலைப்புலிகள் இயக்க கொரில்லாக்கள் 12 பேர் பொலிகண்டி கடற்கரைப் பிராந்தியத்தில் சென்று கொண்டிருந்தனர். வட பகுதிக் கடற்பிராந்தியத்தில் 150 கிலோமீட்டர் தூரம் வரை 'ஆள் அரவம் அற்ற

குண்டுகள் சிங்கள இராணுவத்தைநோக்கி வீசப்பட்டன. ஏவுகணைகளாலும் விடுதலைப் புலிகள் சிங்கள ராணுவத்தை தாக்கி வீரத்துடன் போரிட்டனர். இதன் காரணமாக, விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இருபது சிங்கள இராணுவத்தினர் பலியாயினர். ஏராளமான சிங்களக் கூலிப்படைகள் படுகாயமடைந்தனர்.

சுமார் 5மணி நேரம் இரவிரவாக நடைபெற்ற இப் போரின் இறுதியில் சிங்கள இராணுவம் பின்வாங்கத் தொடங்கியது. விடுதலைப்புலிகள் வெற்றிப் பெருமிதத்துடன் அவ்விடத்தைவிட்டு அகன்றனர். விடுதலைப்புலிகளில் எவருக்கும் ஒரு சிறு

செய்தி வெளியிட வேண்டும் என்றும் இலங்கையிலுள்ள பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுச் சட்டம் போடப் பட்டுள்ளது.

### 50 அப்பாவி தமிழர் குடும்பம் சுட்டுக் கொலை

மன்னார் மாவட்டத்தில் வட்டாக் கண்டல் என்னும் இடத்தில், வாழ்ந்து வந்த 50 தமிழ்க் குடும்பத்தினரை எதுவித தூண்டுதலோ காரணமோ இன்றி சிங்கள இன வெறி இராணுவம் குருவிகளைப் போலச் சுட்டுக்கொன்றுள்ளது. சின்னஞ் சிறு மழலைகள் முதியவர்கள், பெண்கள் என்ற பேதமின்றி 50 தமிழருக்குமதிகமானோர்

ளுக்குமிடையே வெறுப்பை ஏற்படுத்த முயன்று வருகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான தமிழர்கள், இந்த வங்கியிலேயே தங்கள் பணத்தையும், நகைகளையும் போட்டு வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது,

சிறீலங்காவின் சுதந்திர தினம் பெப்ரவரி 4ஆம் நாள் தமிழீழத்தில் பகிஷ்கரிக்கப் பட்டது. யாழ்ப்பாணத்தில் சிங்களக் கொடியை அறுத்தெறிந்த தமிழ் இளைஞன் இராணுவத்தால் சுடப்பட்டான். மட்டு நகரில் சிங்கக் கொடி கட்டிவராததால், ஒரு வானில் வந்த 9 தமிழர்களை சிங்கள இராணுவம் சுட்டது.

## கண் காணிப்பு வலயத்தில் 5 மணி நேர யுத்தம்!

பிரதேசம்' என்று சிங்கள இனவெறியரசு பிரகடனப் படுத்தியுள்ளது தெரிந்ததே.

இச்சட்டத்தை மீறி விடுதலைப்புலிகள் கடலோரப் பிராந்தியத்தில் துணிவோடு நடமாடினர். விடுதலைப்புலிகளுடன் போரிட்டு, அவர்களைக் கொல்வதற்காக அங்கு இரு இராணுவக் கவச வண்டிகள், மற்றும் இரு இராணுவடிறக்குகள், ஜீப்புக்கள் சகிதம் சிங்கள இராணுவம் விடுதலைப்புலிகளை நோக்கிச் சுட ஆரம்பித்தது.

விடுதலைப்புலிகளும் ஒரு கணமும் தாமதிக்கவில்லை அவர்களும் பதிலுக்கு சிங்கள இராணுவத்தை நோக்கி துப்பாக்கியால் மடமடவென்று சுட ஆரம்பித்தனர். கைக

காயமும் ஏற்படவில்லையென்று தெரிகிறது.

### தணிக்கை

சிங்கள இராணுவத்துக்கு ஏற்படும் இழப்புக்களையும், தோல்விகளையும், பத்திரிகை மற்றும் வானொலி போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களில் வெளியிடக் கூடாதென்றும், அப்படி வெளியிட்டால், அவர்களது உற்சாகமும் ஊக்கமும் குன்றிவிடும் என்றும் இராசாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ சில்வா உத்தரவு பிறப்பித்திருக்கிறார். அதே சமயம் அப்பாவித் தமிழர்களை இராணுவம் சுட்டுக் கொல்வதைப் பெரிது படுத்தி "பயங்கரவாதிகளை" இராணுவம் சுடுவதாகச்

சுட்டுக் கொல்லப்பட்டனர். இளம் பெண்களைக் கதறக் கதற ஈவிரக்கமின்றி மிருகங்களை விட மோசமாகக் கற்பழித்தபின் சிங்கள இராணுவம் கொலை செய்தது. இந்த 50 தமிழர் குடும்பங்களுடைய வீடுகளிலிருந்த பெறுமதி வாய்ந்த பொருட்களை கொள்ளையடித்ததுடன், வீடுகளுக்குத் தீயிட்டுள்ளது. இதில் தப்பியவர்கள் அகதிகளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அட்டன் நேஷனல் வங்கியிலும், ஊரடங்கு நேரத்தில் இராணுவத்தினரே கொள்ளையடித்துவிட்டு, அதற்கான பழியை விடுதலைப் போராளிகள் மீது போட்டு, விடுதலைப் போராளிகளுக்கும் மக்க

### 20000 தமிழர் கொல்லப்பட வேண்டுமாம்!

சுதந்திரம் கோரும் ஈழத்தமிழர்களில் 20,000 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட வேண்டும். மேலும் 20,000 தமிழர்களைக் கைதுசெய்து சிறையிலடைத்து, தூக்கிலேற்ற வேண்டும்—இவ்வாறு சிங்கள நாடாளுமன்றில் யூ. என். பி. கட்சி எம். பி. சிறில் மத்தியூ வெறி பிடித்து கூச்சலிட்டான். தமிழருக்கு 12சதவீதமே பாதுகாப்பு தரப்பட வேண்டும் என்றும் அவன் கூறியுள்ளான்.

தமிழீழ சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்துக்கு நாம் பக்குவப்பட்டு விட்டோமா? சுழிபுரம் சம்பவம் எழுப்பும் கேள்வி!

ஈழத்துத் தமிழர்களே! என் தந்தையரே தாய்மாரே! அருமை உடன் பிறப்புகளே!

எங்கள் தாயகம்-தங்கத் தமிழீழம்-சிங்களப் பேரின வாதக் கொடியவர்களின் படைகளால் - கொலைகாரப் படைகளால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளது.

சர்வதேசியப் பயங்கர வாதிகளான இஸ்ரேலிய 'மொசாத்'தும், 'சின்-பெய்'த் தும், பிரிட்டனின் கூலிப் படைகளும் அமெரிக்க ஏகாதிபத்தியக் கழுகுகளும், பாகிஸ்தான், சீனு போன்ற நாடுகளின் ஆயுதங்களும், இன வெறியின் தொட்டிலான தென் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து நவீன ஆயுதங்களும் குவிந்து கிடக்க—அதன் மத்தியிலே நின்று இனவெறி பிடித்த சிங்களப் படைகள் கொக்கரிக்கின்றன.

கொலைவெறியன் அத்துலத் முதலியோ ஒரு விடுதலைப் புலிக்கு ஈடாக நூறு சிங்கள இராணுவம் தயார் என்று குலைத்துத் திரிகிறுன்.

நாள் தோறும் 50 தமிழர்கள் நாய் சுடுவது போலச் சுடப்பட்டு பிணமாக்கப்படுகிறுர்கள்; தமிழ்த் தங்கையர், தாய்மார்கள் குரூரமாக கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்படுகின்றனர்.

தமிழர் வீடுகள் சூறையாடப்பட்டு — தீயிடப்படுகின்றன. தமிழர் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களைக் கூடச் சிங்களவன் தீயின் கோர நாக்குக்கு இரையாக்குகிறுன.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்று ஓர் சிறைச் சாலையாக்கப்பட்டுள்ளன. ஏன் இலங்கைத் தீவின் எந்த மூலையில் தமிழ் இளைஞனைக் கண்டாலும் அவன் 'பயங்கரவாதி'யாகவே சிங்களவன் கண்களில் தோன்றுகிறுன். கொழும்பிலும், மலையகத் தோட்டங்களிலும் கூடத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறுர்கள்.

10,000 தமிழர்கள் சிங்கள இராணுவ முகாம்களில் வைத்து இம்சிக்கபபடுகின்றனர், தமிழ் சகோதரிகள் நிர்வாணமாக்கப்பட்டு வீதிகளிலே நிறுத்தப்படுகிறுர்கள்.

இவற்றைத் தட்டிக் கேட்டால்—இதுதான் புத்த தர்மமா எனறு கேட்டால் —அவன் உயிர்பறிக்கப்படுகிறது,

இவை போதாவென்று, தமிழர்களைக் கொலை செய்வதற்கு சிங்களவருக்கு துப்பாக்கி வேறு கொடுக்கப்படுகிறது இனவெறியன் ஜெயவர்த்தனு அரசினுல்.

இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியில், உயிரையும் திரணமாகமதித்து, சிங்கள இராணுவத்தை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கின்றனர். பிரபாகரன தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 1984 மார்ச் திங்களிலிருந்து தொடர்ச்சியாக.

பிரபாகரனின் கொரில்லப் போராட்ட முறையை "தனிநபர் பயங்கரவாதம்" என்று கூறி ஏற்க மறுத்து, மக்களை ஆயுதம் ஏந்திப் போராட வைப்பதே தமது நிலை என்று நேற்று வரை கூறிக்கொண்டிருந்த 'ரெலோ'வும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும்(EPRLF) இன்று கொரில்லாப்போர் முறையே சரியென்பதை ஒப்புக் கொண்டு விட்டனர்.

அதன் விளைவுதான—சாவகச்சேரி காவல் நிலையத்தை இருந்த இடம் தெரியாமலாக்கி, 50 சிங்களக் காவலர்களின் கதையை முடித்த "ரெலோ"வின் வீர சாதனை! தொடர்ந்து நிகழ்ந்த ராணுவ ரயில் வண்டிக் கவிழ்ப்பு!

அதன் விளைவுதான்—கருவாஞ்சிக்குடிக் காவல் நிலையத்தைச் சேர்ந்த 8பொலிஸ் அதிகாரிகள் வந்த ஜீப்புக்கு மறைந்திருந்து வெடிகணணி வைத்து அதைத் தகர்த்தெறிந்து எட்டுக் காவல் அதிகாரிகளையும காலனிடம் அனுப்பிய EPRLFஇன் இணையற்ற சாதனை!

**இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்ருல்— பிரபாகரனுக்கு நிச்சயம் பெருமை சேர்க்கவல்ல; இலட்சியத்தில் ஒன்றுபட்டுள்ள இயக்கங்கள் அதை அடையும் மார்க்கத்திலும் ஒன்றுபட்டு நெருங்கி வருகிறுர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டத்தான்!**



**சுழிபுரத்தில் தோண்டியெடுக்கப்பட்ட 8 விடுதலைப்புலி இயக்க ஆதரவாளர்களின் சடலங்கள்**

ஈழப் புரட்சி இயக்கமும் (EROS) சிங்கள இனவெறி அரசின் பொருளாதார முனைகளைத் தாக்கி அழிககும வேலையில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு தமிழீழத்தின் சுயாதீனத்தையும், சுதந்திரத்தையும் நாடும் இயக்கங்கள் பல்வேறு வகையிலும் சிங்கள இனவெறியாகளின் ஆட்சியை விரட்டி அடிக்கும் வீரச் செயல்களிலே ஈடுபட்டு வரும் நேரத்தில், தம்மையும் ஒரு விடுதலை இயக்கம் என்று கூறிக்கொள்ளும் சதிகாரர்கள் சிலர் தமிழினத்துக்கு வரலாறு காணு அளவுக்கு சோதனையும் வேதனையும் நிறைந்துள்ள இச்சமயத்தில் மேற் கொண்டுள்ளதாகக் கூறப்படும் மிருகத்தனமான, மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான ஒரு நிகழ்ச்சியை எண்ணும்போது தான்—தமிழீழ மககள் உணமையிலே சுதந்திரத்துககுத் தகுதியுடையவர்கள தானு எனகிற கேள்வி நமக்குள்ளே எழுகிறது!

1982ஆம் ஆண்டில் அருமையான இளஞ்சிந்தனையாளன்- கடமை தவருத வீரன்— கண்ணியத்தின் இருப்பிடம்— தம்பி இறைகுமாரனையும், உமை குமாரனையும், நள்ளிரவில் வீட்டிற்கு சென்று தட்டிஎழுப்பி வயல்வெளிக்கு கொண்டு சென்று குரூரமாகக் கொத்தியும் குதறியும் இதே கும்பல் கொலை செய்தார்களே. அவ்வளவு தூரம் ஈனக் கொலை புரிய அவர்கள் இருவரும் என்னதான் குற்றம் செய்தார்கள் என்பதற்கு இன்றுவரை விளக்கமில்லை.

அடைக்கலம் தந்த பேராவூரணியில் நடந்ததையும் யாரும் மறந்துவிட முடியாது.

இப்போது நடந்ததுதான் என்ன?

பிரபாகரனின் விடுதலைப் புலி இயக்கத் தோழர்கள் ஆறு பேர், எவருனும் வலிந்து மோதலுக்கோ வம்புச் சண்டைக்கோ போகவில்லை.

மறைந்த மாவீரன் தளபதி செ. சத்தியநாதனின் இரணடாவதாணடு நினைவு அஞ்சலி சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு ஆறு நிராயுதபாணிகளான விடுதலைப்புலி ஆதரவாளர்கள் சுழிபுரத்தில் கூடியுள்ளனர். இவர்கள் அனைவரும் அவ்வூர் இளைஞர்கள்!

இந்த ஆறு இளைஞர்களும் 27-12-84 சத்தியநாதனின் நினைவு தினமாகையினுல், 25-12-84 இரவு சுவரொட்டி ஒட்டும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த ஆறு இளைஞர்களையும் குறிப்பிட்ட சமூக விரோத "சதிக்கும்பல்" ஒன்று, சுழிபுரம்' ஜெயந்திமில்' சந்தியில வைத்து இரவு 10 மணியளவில், ஆயுத முனையில் 'வான்' ஒன்றில பலாதகாரமாக ஏற்றியது. இவ்வாறு விடுதலைபபுலித் தோழர்களைக் கடத்தியவர்கள், தாம் பினபு அவர்களை விட்டுவிட்டதாக விடுதலைப்புலி இயக்க ஆதரவாளர்சளின் பெற்ருேரிடம் கூறியுள்ளனர். ஆனுல் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் வீடு திரும்பவே இல்லை.

அன்றைய தினம் சிங்கள இராணுவம, சோதனையிடவோ, வேறு அலுவலாகவோ சுழிபுரத்தினுள் நுழையவேயில்லை.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ அறிக்கையின்படி, சந்தேகமடைந்த விடுதலைப் புலிகளும் ஊர்மக்களும், காணுமற்போன இளைஞர்களின உறவினரும் தேடுதல் நடத்தினர். அவ்வாறு நடத்திய போது, 'கை' ஒன்றைக் கண்டனர். எனவே அவர்கள் அந்த இடத்தைத் தோண்ட ஆரம்பித்தனர்.

அப்போது அங்கு வந்த கொலையாளிகள் குழியை தோண்டக் கூடாது என்று ஆயுத முனையில் ஊர் மக்களை எச்சரித்தனராம். அப்போது அந்த இடத்துக்கு விடுதலைப் புலி கொரில்லாக்கள் வரவே, கொலைகாரர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

கால் வேறு, கைகள் வேறு, ஆணுறுப்பு வேறு, தலைகள் வேருக, மூன்று குழிகளிலிருந்தும் ஆறு விடுதலைப்புலி இயக்கத் தொண்டர்களின் உறுப்புக்களும், மேலும் அக கொலையைக் கணடதாகக் கூறபபடும் வேறு இருவரது சடலங்களும் தோண்டியெடுக்கப்பட்டன.

கண்டதுண்டமாக சதிகாரர்களால் வெட்டிக்கொலை செய்து புதைக்கப்பட்ட இளைஞர்களின் பெயர்கள் வருமாறு :—

சி. சிவகுமாரன் (வயது 22) மூளாய், சிவானந்தன் (வயது 20) மூளாய், சி. சிவராசா (வயது 18) சுழிபுரம், த புவீந்திரன் (வயது 20) சுழிபுரம். வி. தேவநாதன் (வயது 19) சுழிபுரம், க. யோகீஸ்வரன் (வயது 16) சுழிபுரம்.

சிங்கள இராணுவ பாசிஸ்ட் ஆட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு மேற்படி சதிக் கும்பலுக்கு வல்லமை இல்லாவிடின, சக்தியிலலாவிடின போர்க்களத்திலிருந்து ஒதுங்கியிருக்கலாமே! 'விடுதலை இயக்கம்' என்று பெயரை வைத்துக்கொண்டு பச்சிளம் குழந்தைகளையே இப்படி பதைபதைக்கத் துடிதுடிக்க வெட்டிப் போடுவது என்ன நியாயம்?

சம்பந்தப் பட்டவர்கள் மேற்கொண்ட இந்தக்கொலைகளுக்கு—பாசிஸ்ட் நடவடிக்கைகளுக்கு அக்கழகம் உடனடியாக உத்தியோக பூர்வமாகத் தமிழீழ மக்களிடம் பகிரங்கப் பொது மன்னிப்புக் கேட்கவேண்டும் என "ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி" தனது சனவரி 85 இதழில் கோரியுள்ளது. இவ்வாறு கோரியதற்காக EPRLF இளைஞர்கள் இருவர் மட்டக்களப்பில் இதே சதிக்கும்பலினுல் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிகிருேம்.

'தமிழீழ விடுதலை' என்ற புனிதமான இலட்சியத்துக்காக ஆயுதமேந்திப் போராடி வரும் விடுதலைப் போராளிகளின் ஆயுதங்கள், எதிரிக்கும் இனத்துரோகிக்கும் எதிராக பயனபடுத்தப்பட வேண்டுமே தவிர, சக போராளிகளுக்கு எதிராகத் திரும்பவே கூடாது.

**இயக்கங்கள் தங்களுக்குள் முன்பொருகாலத்தில் மோதிக்கொண்ட - சுட்டுக் கொண்ட காலமெல்லாம் —பொய்யாய், கனவாய் பழங்கதையாய் போகட்டும். இன்று அரசியல் தலைவர்கள்' தமிழீழ மக்களால் தூக்கி எறியப்பட்டு விட்டார்கள். இன்று தமிழீழ மக்கள் தீவிரவாத விடுதலை இயக்கங்களிலேயே முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளனர்.**

**'சுழிபுரம் படுகொலைகள்,' மேலும் தொடருமாளுல், அப்படிப்பட்ட இயக்கங்களை இனங்கண்டுமக்களே எதிர்காலத்தில் தண்டிப்பார்கள்.**

மக்கள் சக்தி மகத்தானது; தீவிரவாத இயக்கங்களிலே எது பொறுப்புணர்ச்சியுடனும், கட்டுப்பாட்டுடனும், தூய்மையுடனும், உயிரையும் அர்ப்பணித்துத் தமிழீழ விடுதலைக்கு போராடி வருகிறது; எந்த இயக்கம் தனக்கு மூக்குப் போனுலும், இன்னேர் இயக்கத்துக்கு சகுனப் பிழையாக வேண்டும் என்ற குரோதவிரோத உணர்வுடன் செயல்படுகிறது என்பதை தெளிவாக அறிவார்கள். அவ்வாறு குறுகிய மனதுடன் நடபபோரை கண்டிக்கவும் தேவையானுல் தண்டிக்கவும் செய்வார்கள்.

"சுழிபுரம் படுகொலைகள்" போனற சம்பவங்கள் தமிழ் ஈழத்திலே இனி நடைபெற வேண்டாம்; நடைபெற மக்கள் அனுமதிக்கவும் கூடாது. எதிரிகள் ஏளனம் செய்து எக்கொலியுடன் தமிழர்களைப் பார்த்துச் சிரிப்பதற்கு தமிழர்களே இடமளிக்கக் கூடாது என்று தாழ்மையுடன் வேண்டுகிருேம்.

ஒற்றுமை என்பது வெறும் உதட்டளவில் இருந்து பயனில்லை; அது களங்கமற்ற பரிசுத்தமான தூய்மை கொண்ட உள்ளத்திலிருந்து பிறக்க வேண்டும்.

—நக்கீரன்

### தமிழ் பெண் இராணுவத்தால் கற்பழித்து கொலை!

பலாலி இராணுவமுகாம் அருகில் ஒரு தமிழ்ப் பெண்ணின் உடல அரைகுறையாகப் புதைக்கப்பட்ட நிலையில் கணடுபிடிக்கப்பட்டது. அதைத் தோண்டி எடுத்து வைத்திய பரிசோதனை செய்த போது, அப்பெண கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப் பட்டது தெரிய வந்தது. சிங்கள இராணுவ மிருகங்களின மிலேச்சச் செயல் இது என்பது சொல்லாமலே விளங்கும

### வெல்லாவெளியில் மூன்று பொலீசார் சுட்டுக்கொலை

மட்டக்களப்பிலுள்ள வெல்லாவெளி என்னும் இடத்தில் 3 சிங்களப் பொலீசார், தீவிரவாதிகளினுல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

### மட்டு நகரில் 14தமிழர்கள் கொலை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்லாறு என்னும் ஊரில் பன்னிரண்டு அப்பாவித் தமிழர்களை சிங்கள அதிரடிப்படை சுட்டுக் கொன்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கேள்வியும் விளக்கமும்

கே. ஞானவேல்
சென்னை-34.

கே: விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் 'விடுதலைப்புலிகள்' என்ற பத்திரிகை வரும்போது 'வீரவேங்கை' எதற்காக?

ப: ஓர் இயக்கத்தின் சார்பாக ஒரேயொரு பத்திரிகை மட்டுமே வெளிவர வேண்டும் என்ற சட்டம் ஏதேனும் இருக்கிறதா என்ன? தி மு. கழகம், உத்தியோக பூர்வமாக 'நம்நாடு' நாளிதழை வெளியிட்டபோது, சமகாலத்தில் அறிஞர் அண்ணாவின் 'திராவிடநாடு' கலைஞர் கருணாநிதியின் 'முரசொலி', நாவலரின் 'மன்றம்' ஆசைத்தம்பியின் 'தனியரசு', கண்ணதாசனின் 'தென்றல்' என்று இப்படி எத்தனையோ ஏடுகள் கொள்கை விளக்கத்திற்காக வெளியிடப்படவில்லையா? 'வீரவேங்கை'யின் செலவு போக லாபம் வருமானால், அதுவும், விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கே போகும் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்!

கே: ஈழ விடுதலைக்குப் போராடும் இயக்கங்கள் அனைத்தையும ஒன்றிணைத்திட நீங்கள் முயற்சி செய்யவில்லையா?

ப: அது தேவையற்ற ஒன்று; எந்த விடுதலை இயக்கம் சுயநலமின்றி, தியாகத தீயில் புடம்போட்டு ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலே நின்று அஞ்சாது போராடி வருகிறதோ அந்த இயக்கத்துடன் தமிழீழ மக்கள் தம்மை இணைத்துக் கொள்வார்கள். பத்திரிகைகளுக்கு அடிக்கடி அறிக்கை விடுபவர்களும், தம்மை விளம்பரம் செய்துகொள்ள முன் வருபவர்களும் தலைமறைவுப்புரட்சி இயக்கங்களுக்குத் தலைமை தாங்குவதற்குத் தகுதியுள்ளவர்கள்தானா என்பதை யோசித்துப் பாருங்கள்!

கே: 'தேவி' இதழில் 'புளொட்' இயக்கத்தின் செயலதிபா முகுந்தனை அவரது இயக்கத்திலுள்ளவர்கள் 'பெரியவர்' என்று அழைப்பதாக சொல்லப்பட்டிருந்ததே!

ப: அப்படியா? அது எனக்குத் தெரியாது. தமிழ்நாட்டு மக்களுக்கு 'பெரியார்' என்றால். ஈ. வெ. ரா அவர்களின் நினைவே ஓடி வரும். தமிழீழ மக்களுக்குப் ''பெரியவர்'' என்றால், மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவின தோற்றமே கண்களில் நிழலாடும் தமிழீழமக்களைப் பொறுத்தவரை 'பெரியவர்' என்றால் அது தமிழீழத் தந்தை செல்வா அவர்களே. வேறு 'பெரியவர்'களைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை.

x x x

எஸ். முருகானந்தம்
கோயமுத்தூர்

கே: ஒரு சஞ்சிகைக்கு பேட்டி அளித்த தமிழர் கூட்டணிப் பிரமுகர் ஒருவர் தமிழீழ விடுதலைப்புலிகளும் ஏனைய தீவிரவாத இயக்கங்களும் த. வி. கூட்டணியின் பின்னணியிலேயே வளர்ந்தவை என்று கூறியுள்ளாரே அது சரியா?

ப: தவறு; முற்றிலும் தவறு; அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், த. வி. கூட்டணிக்கும் தொடர்பே இல்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழீழத்தை மீட்பது விடுதலைப்புலிகளின் கொள்கை; ஆயுதப் போராட்டத்தை எதிர்த்து ஒவ்வொரு தடவையும் அறிக்கைவிட்டதுகூட்டணி. மாநில சுயாட்சி தந்தால் தமிழீழத்தைக் கை விடுவோம் என்கிறது கூட்டணி. சுதந்திரத் தமிழீழம் கிடைக்கும்வரை விடுதலைப்போரை நடத்த உறுதி பூண்டுள்ளவர்கள் விடுதலைப்புலிகள். அது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரன் த வி. கூட்டணியில் ஒரு நாளாவது உறுப்பினராக இருந்தது இல்லை. கூட்டணியினரை 'இனத் துரோகிகள்' என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார் தம்பி பிரபாகரன். கூட்டணி முன்னாள் பா. உ க்களில் ஒருவர் மீது லஞ்ச ஊழலுக்காக ராணுவ நடவடிக்கை எடுத்தவர்கள் விடுதலைப் புலிகள். சந்தர்ப்பவாதிகளான கூட்டணியின் நிழல் கூடப் படாமல் தூய்மையுடன் வளர்ந்த இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம். அப்படிப்பட்ட இயக்கம், கூட்டணியின் பின்னணியிலிருந்து வளர்ந்தது என்று கூறுவது சுத்த அபத்தம்.

x x x

வி. செல்வராஜ்,
சென்னை-21.

கே: இந்திய இராணுவம். இலங்கைக்குச் சென்று, தமிழீழத்தைத் தனி நாடாக்கினால், அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற முறையில் த. வி. கூ. தலைவர் திரு அமிர்தலிங்கத்திடம்தானே அரசை ஒப்படைக்கும்? அமிரின் கையில் அதிகாரம் போனால் அவரை எதிர்த்தவர்கள் அத்தனை பேரையும் அழித்து விடுவாரே?

ப: தமிழர் விடுதலைக் கூட்டணி, சிங்கள சிறீலங்காவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியற். கட்சியே தவிர தமிழீழ மக்களினால் அங்கீகரிக்கப்பட்டதல்ல—1977 இல் அவர்கள் பெற்ற அதிகாரம், 1983 யூலையுடன் முடிவடைந்துவிட்டது. இப்பொழுது மக்கள் ஏற்றுக் கொண்டுள்ள புரட்சி இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளே. மக்கள் ஆதரவை அடியோடு இழந்துவிட்ட அமிர்தலிங்கத்திடம் ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காக்கும் இந்தியா, தமிழீழத்தின் ஆட்சிப் பொறுப்புக்களை ஒருபோதும் ஒப்படைக்காது; அது சரி, நாமே போராடி நமது விடுதலையை நிலைநாட்ட வேண்டுமே தவிர, இந்திய இராணுவம் நமக்கு விடுதலை வாங்கித் தரும் என்ற கனவுலகில் நாம் வாழவில்லையே!

x x x

குப்புசாமி
மதுரை

கே: சிங்கள ஜெயவர்த்தனா அரசு தருவதை ஈழத்தமிழர்கள் பேசாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் 'பயங்கரவாதிகளுக்கு' எதிராக ஜே. ஆர். அரசு ஏவிவிட்டுள்ள அடக்குமுறை பாசிசச் சட்டங்கள் நியாயமானவை என்றும் தொண்டமான் கூறியுள்ளாரே?

ப: ஆனைப்பட்ட சிறில் மத்தியூவின் மந்திரிபதவி பறிக்கப்பட்ட பின்பு, ஆமாம்சாமி போடாவிட்டால் தன்னுடைய கூலி அமைச்சர் பதவியும் பறிபோய்விடும் என்ற நடுக்கம் இப்போது தொண்டமானுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் பிதற்றுகிறார். கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த ஒரு விஜய ரகுநாத தொண்டமான் போலத் தமிழீழ விடுதலைப் போராளிகளை ஒழிப்பதற்கு ஆதரவு தர, ஒரு சௌமிய மூர்த்தி தொண்டமான் ஜெயவர்த்தனாவுக்குகிடைத்திருக்கிறார். பதவி ஆசை யாரை விட்டது?

x x x

வி எஸ். சுந்தரம்
வேதாரண்யம்

கே: தமிழீழ மக்களை வெறி நாய்கள் என்றும் பைத்தியம் பிடித்தவர்கள் என்றும் துவேஷம் கக்கியிருக்கிறானே சிங்கள மந்திரி சிறில் மத்தியூ?

ப: தமிழீழ மக்களின் ''சுதந்திர உணர்வு'' என்னும் முழு நிலவைப் பார்த்துச் சிங்களச் சொறி நாய் சிறில் மத்தியூ குரைக்கிறான்; சிங்கள வெறி நாய்கள் குரைத்துக் கொண்டேயிருக்கட்டும்; விடுதலைப்புலிகள் பாயும்போது இவை என்ன செய்யப் போகின்றன என்பதைப் பார்ப்போம்!

x x x

விஜயகுமார்
பழவந்தாங்கல்

கே: தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு பாசறைகளைப் பிடித்து அழித்து விட்டோம் என்று கொக்கரிக்கிறானே அத்துலத் முதலி?

ப: பொய்களை அடுக்கடுக்காகக் கூறியே தமிழீழ மக்களின் மனத் திண்மையை உடைக்க முயற்சிக்கிறான் அத்துலத்முதலி. அச்சுவேலியில் 500 சிங்கள இராணுவ கொமண்டோக்களுடன் யாரோ ஒரு இனத் துரோகி தகவல் கொடுக்க விடுதலைப் புலிகளின் ஒரு சிறிய கூடாரத்தைச் சுற்றி வளைத்து ஆக ஐந்தே ஐந்து புலிகளுடன பன்னிரண்டு மணி நேரமாகப் போராடி. சுற்றில் ஐந்து விடுதலைப் புலிகளைச் சுட்டுக் கொன்றுள்ளது மட்டும் தான் முதலியின் மகாபெரிய வீரம்! புலிகளின் எதிர்த் தாக்குதலில் சிங்கள இராணுவத்தின் கவச வண்டி கூட அழிக்கப்பட்டிருக்கிறது. முழுமையான விடுதலைப் புலிகளின் வலிமை அத்துலத் முதலி அறிகின்ற காலம் விரைந்து வரும். அதுவரை யானை பார்த்த குருடன் போல அத்துலத் முதலி அலட்டிக் கொண்டிருக்கட்டும்.

x x x

ராகவன
கோயம்புத்தூர்

கே: அத்துலத் முதலியை முந்திய சிறிமா ஆட்சி ஏன் சிறையில் பூட்டி வைத்திருந்தது?

ப: முதலியின் முதல் மனைவிக்கும் வேறு யாருக்குமோ கள்ளக் காதல்; அதனால் அந்தக் கள்ளக் காதலனைக் கொலை செய்ய முதலி முயற்சித்தான் என்ற ஐயத்தின் பேரில் தான். இப்போது ஆண்மையற்ற முதலியை மனைவி தள்ளிவைத்து விட்டாள். இரண்டாந்தாரமாக ஜெயவர்த்தனா குடும்பத்தில் ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு ஆட்டம் போடுகிறது இந்த முதலை!

x x x

இராமசாமி
சென்னை 28

கே: இந்தியாவின் இளைய பிரதமர் ராஜீவ் காந்தியைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: வயதில் இளையவரானாலும், கூர்மையான அறிவும் திண்மையான உள்ளமும் கொண்டவர். சின்னப் பையன் தானே நேரே சந்தித்துப் பேசுவதன் மூலம் தனது பக்கம் திருப்பி விடலாம் ராஜீவை என்று கனவு காணுகிறது கிழட்டு நரி ஜெயவர்த்தனா. அதில் ராஜீவ் ஏமாறமாட்டார் என்று நம்புவோம்.

x x x

வி. துரை
திருச்சி

கே: தமிழீழ நாட்டில், 30 இலட்சம் இராணுவப் பயிற்சியளிக்கப்பட்ட சிங்களவர் 30 ஆயிரம் பேரை சிங்கள இராணுவ உதவியுடன் குடியேற்றி அவர்களுக்கு ஆயுதமும் வழங்கப் போகிறாராமே அத்துலத் முதலி?

ப: இது ஒன்றும் புதினமல்ல—இதுவே ஜெயவர்த்தனாவின் நீண்டகாலத் திட்டம். கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதர்களை சியோனிஸ்டுகள் குடியேற்றுவது போல, எமது தமிழீழப் பூமியை சிங்கள மயமாக்கி தமிழர்களுக்கு நாடே இல்லாமற் செய்து விட்டால், தமிழினமும தமிழீழமும் பூண்டோடு அழிந்து சர்வம் சிங்களமாகிவிடும் என்று நினைக்கிறார்கள் சிங்கள சியோனிஸ்டுகள். இதனால் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நேரடி இரத்தக்களரி ஏற்படுமே தவிர, சமாதானம் ஏற்படப் போவதில்லை. சிங்கள இனத்தையே முடிவில் அழித்தொழிக்கும் செயலுக்கு வழி வகுக்கிறான் அத்துலத் முதலி. அழிவுக்கு முன் அகந்தை ஆட்டம் போடுகிறது. தமிழர்கள் தங்கள் கண்ணை இழந்தாலும் மண்ணை இழக்க ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமிர்தலிங்கத்தின் கொள்கைக்குழப்பம்

# தமது குறிக்கோள் எதுவென்பதை ஈழத்தமிழர் தெளிவாக்க வேண்டும்!

## 'நியூஸ்டுடே' ஆசிரியரின் ஆணித்தரமான தலையங்கம்

**இலங்கைத் தீவில், தமிழீழப் பகுதியில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் (அதாவது, வடக்கு கிழக்கு மாகாணங்களில்) 30 ஆண்டுகாலச் சிங்களப் பேரினவாதக் கொடுங்கோன்மை தாங்காது, 1976ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள் வட்டுக் கோட்டையிலுள்ள பண்ணாகத்தில் ஓர் மாபெருந் தேசிய மாநாட்டைக் கூட்டி, அதில் ஒரேயொரு தீர்மானத்தை எடுத்தார்கள்; அதுவே, சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற சோசலிசத் தமிழீழ அரசொன்றை, தமிழ் மக்களுக்கேயுரிய தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், வழிவழி வந்த இறைமையின் அடிப்படையிலும், பாரம்பரியத் தமிழர்களின் தாயகத்தில் நிறுவுவது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாகும். இதே தீர்மானம், 1977 ஆடிப் பொதுத் தேர்தலில், தமிழீழ மக்கள் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. எனவே இதுவே ஈழத் தமிழர்களின் குறிக்கோள்—கோரிக்கை—இலட்சியம் எல்லாமாகும்.**

**நேரத்துக்கு நேரம் குத்துக்கரணமடிக்கும் அமிர்தலிங்கத்தின் கூட்டணி அரசியல்வாதிகளை தமிழீழ மக்கள் நிராகரித்துவிட்டு இன்று, திரு வே. பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற புரட்சிகர இயக்கத்தின் தலைமையில், ஆயுதப் போராட்டத்தின்மூலம் சுதந்திரத் தமிழீழம் என்ற குறிக்கோளை வென்றெடுக்க போராடிவருகின்றனர் என்பதையும், அமிர்தலிங்கம் போன்ற பிற்போக்குத் தலைமைகளை ஈழத் தமிழர்கள் உதறியெறிந்துவிட்டார்கள் என்பதையும் 'நியூஸ் டுடே' ஆசிரியருக்குக் கூறிவைக்க விரும்புகிறோம்.**

**— ஆசிரியர்**

இலங்கைத் தீவிலுள்ள பல்வேறு தமிழ் தேசிய இயக்கங்களும் தமது அடிப்படையான, திட்டவட்டமான குறிக்கோள் என்ன என்பதை ஒளிவு மறைவின்றி தைரியமாகவும் வெளிப்படையாகவும் எடுத்துக் கூறிவிட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டால் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கு உணர்ச்சி பூர்வமாகவோ அல்லது தத்துவ ரீதியாகவோ ஆதரவளிப்போர்—பின்னல் ஏதாவது ஒரு கட்டத்தில் அவமானப்படாமல், எவ்வளவு தூரம் ஈழத் தமிழ் தேசியவாதிகளுக்கு உதவ முடியும் என்பதை இப்போதே கணக்கிட்டுக் கொள்ள முடியும்.

"ஈழப் பெருமக்களே! உண்மையில் நீங்கள் வேண்டுவது என்ன?" என்பதே இன்றைய அடிப்படைக் கேள்வியாகும் பல்வேறு ஈழத்தமிழர் குழுக்களும் அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகளைக் கொண்டு, அவர்கள் உண்மையிலே கோருவதென்ன என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது மட்டுமின்றித் தமது குறிக்கோளை எவ்விதம் சென்றடையப் போகிறார்கள் என்பதும் விளங்கவில்லை.

கொழும்பிலே நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டை எடுத்துக் கொள்வோம். 1983 யூலையில் இடம்பெற்ற தமிழர் படுகொலையை யடுத்து, மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் சிறப்புத் தூதர் ஜி. பார்த்தசாரதி உருவாக்கிய திட்டத்தின் அடிப்படையிலேயே இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. கொழும்பு அரசாங்கம், பார்த்தசாரதியின் ஆலோசனையை உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. இப்பேச்சுவார்த்தையை தொடக்கி வைக்கவே ஜி. பார்த்தசாரதி கொழும்புக்கு மும்முறை விஜயம் செய்ய நேரிட்டது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன, 1983 நவம்பர் திங்களில் டெல்லிக்கு வருகை தந்த போது, **தமிழர்களுக்கு இரு மாகாண சுயாட்சி சபைகளை வழங்குவதையிட்டுப் பேசினார்.** யூலையில் நடைபெற்ற தமிழினப் படுகொலையின் பின்னணியில், இது முன்றடி பின்னேக்கியதுதான் என்றாலும், ஒரடி முன்னேற்றமானது என்று கருதி இந்தியா அதை வரவேற்றது. இந்தியாவுக்கு அரைகுறை அகதிகளாக வந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப் பீடத்திடம், மேற்படி பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது.

மூன்று கிழமைகளுக்குள் முடிவடையும் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பமான பேச்சுவார்த்தை 12 நீண்ட மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டது. இந்த இடைவேளையில், கொழும்பு அரசாங்கம், குண்டர்களினால் அதிகார பூர்வமின்றித் தமிழர் கொலை செய்யப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் அதிகார பூர்வமாகவே தமிழர்களைக் கொலை செய்யும் திட்டத்தை செயற்படுத்தியது. உண்மையான அல்லது கற்பனையான 'பயங்கர வாதத்தை' ஒழித்து கட்டுவதற்காகவே இவ்வாறு தமிழர்கள் கொலை செய்யப்படுவதாக அரசாங்கம் 'நியாயம்' வேறு காட்டியது.

'மொசாட்' கொமாண்டோக்கள், பிரிட்டனின் எஸ். ஏ எஸ். ஏஜண்டுகள், சி.ஐ.ஏ. யின் திரைமறைவு நடவடிக்கைகள், தென்னாபிரிக்க ஆயுதங்கள், ஆகியவை விசேட இராணுவ, கடற்படைகளுடன வடமாகாணத்துக்கு அனுப்பப்பட்டன. யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகவே போடப்பட்ட ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவமும், கொமாண்டோக்களும் இளம பெண்கள் உட்பட அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்தனர்.

இந்த நடவடிக்கையானது எதிர் நடவடிக்கைகளை ஏற்படுத்தின. சுவருடன தள்ளப்பட்ட தமிழ் தேசியவாதிகள், வேறு வழி எதுவுமற்ற நிலையில—அரசுபடைகளுக்கு எதிராக எதிர்த்தாக்குதல்களை நடத்தினர். வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் நிரந்தரமாகவே இராணுவ முற்றுகைக்குட்படுத்திட அரசாங்கத்துக்கு இது ஓர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. தமிழ் மக்கள் இனத்தையே பட்டினி போட்டனர். அரசின் அதிதீவிர அடக்குமுறைகளினால், இயற்கையின் சுழற்சிக்கமைய தமிழ்த் தீவிரவாதிகள் மென்மேலும பதிலடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சனவரி ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை ஆரம்பமான போது, அங்கு முன் வைக்கப்பட்ட பிரச்சினை, **'தீராமல் வளர்ந்துகொண்டேயிருக்கும் தமிழர்களின் குறைபாடுகளுக்கு அரசியல் தீர்வு காண்பது'** என்றே கூறப்பட்டது. எல்லாப் பக்கத்திலிருந்தும் வன்முறை எழுகின்ற சூழ்நிலையில்—அரசியல் தீர்வு எதுவும சாத்தியமில்லை என்பதனால், மேற்படி சர்வகட்சி மாநாடு அரசாங்கத்தினால் திட்டமிட்டு தமிழர் மீது நடத்தப்படும் பயங்கரவாதம் சம்பந்தமான பிரச்சினையைத் தள்ளிவைத்துவிட்டது. எனவே கடந்த 1984 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டபோது சர்வகட்சி மாநாட்டுக்கிருந்த குணம்சம் டிசெம்பரில் அது முடிவடைந்தபோது தலைகீழாக மாறிவிட்டது.

மூன்று தமிழ் இயக்கங்கள் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டன. கொழும்புப் பாராளுமன்றத்தில், அரசின் அதிகாரபூர்வ எதிர்க் கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, அமைச்சரவையிலங்கம் வகிக்கும திரு தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், உயிருடன் இருக்கிறதா இல்லையா என்று மிகப்பலருக்குத் தெரியாத அகில இலங்கை தமிழ காங்கிரஸ், ஆகியவையே அழைக்கப்பட்ட 3 அமைப்புக்களாகும். ஏனைய தமிழ் தேசிய இயக்கங்கள் பல விலக்கி வைக்கப்பட்டன. அழைப்பு அனுப்பியிருந்தால் கூட அவை ஏற்றிருக்குமா அல்லவா என்பது வேறு விஷயம், ஆனல் அவை "அங்கீகரிக்கப படவில்லை" என்பதே உண்மையில் அவை அழைக்கப்படாததற்குக் காரணமாகும்.

இதற்குக் காரணம் என்ன? ஏனைய அமைப்புக்கள் பேச்சுவார்த்தையின் அடிப்படையை ஏற்றுக கொள்ள மறுத்துவிட்டன. அதாவது—ஐக்கிய இலங்கையின் ஒருமைப்பாட்டுக் குள்ளும், இறைமைக்குள்ளும் அமைந்த தீர்வு எதையும் ஏற்க அவை ஆயத்தமாக இல்லை. சாதாரண சூழ்நிலையில், இத்தகைய இயக்கங்கள் அழைககப்படாதது எதிர்பார்க்க முடியாத விஷயமல்ல.

**ஆயின், கொழும்பு அரசாங்கமே, இலங்கைத் தீவை, சிங்களவர்—தமிழர் என்று கூறுபோடாமலும், தமிழ்ச் சிறுபான்மையின மக்களைக் கொலைசெய்வதற்கு சாதாரண சிங்களவர்களுக்கு ஆயுதம் வழங்காமலும் இருந்திருந்தால், நிலைமை வேறு. மிலேச்சத்தனமான அரச பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடும் வீரம்தான் தமிழ் மக்கள் செய்த ஒரே பாவமாகும்.**

வெள்ளைப் பயங்கர வாதத்தை (அரசபயங்கர வாதம்) இயற்கையாகவோ அல்லது நீண்டகால ஒடுக்குமுறையினாலோ தோன்றியுள்ள சகல விடுதலை இயக்கங்களும் 'சிகப்பு' பயங்கர வாதத்திலேயே உலகெங்கும் எதிர்த்து வருகின்றன. இதைக கொழும்பு அரசு இன்னும் புரிந்து கொள்வதாயில்லை.

இது ஆச்சரியமான தொன்றல்ல. ஆனல் பெரும் ஆச்சரியப்படத் தக்கது என்னவெனில், அழைப்பின்பேரில் கொழும்பில் நடந்த சர்வகட்சி மாநாட்டில கலந்து கொண்ட தமிழ மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள், ஏமாற்றம் அல்லது மோசடி என்று கூறிக் கொள்ளும் 'பங்கேற்பு அரசியலை' (Participatory politics) கைவிடாமலே அரச பயங்கரவாதத்தைக் கண்டிப்பதாக நடித்திருப்பதுதான்.

இந்திய வம்சாவளியினரான தோட்டத் தமிழர்களை மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிலை, எமக்கு நன்கு தெரியும். இ தொ. கா. தலைவர், ஜெயவர்த்தனவின் அமைச்சரவையிலேயே இருக்கிறார். அரச பயங்கர வாதத்துக்கான அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பிலிருந்து அவர் ஒதுங்க முடியாது. ஆனல திரு. தொண்டமான், தம்மைப் பொறுத்தவரை நேர்மையீனமாக இருக்கிறார் என்று கூற முடியாது. எது நடந்தாலும் தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு "ஐக்கிய இலங்கை" என்ற அமைப்புக்குள்ளேயே காணப்பட வேண்டும் என்று அவர் தெளிவாகவே கூறுகிறார்.

இலங்கையின் அரசியல் சாசனத்துக்கே சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்து, அதனால் பாராளுமன்றத்துக்கு வெளியே தள்ளப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஒரு தெளிவான நிலையை மேற்கொள்ள ஏன் முடியவில்லை? அவ்வாறு தீர்க்கமான முடிவை எடுக்கவிடாமல் இவர்களைத் தடுப்பது என்ன? கூட்டணியின் தலைமைப்பீடம், விசர்நாய்களுடன் ஓடாவிடினும், வேட்டையாடப்பட்ட முயலுடன் சேர்ந்து ஓடுகிறது என்பதை மிக வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பெரும்பாலான காலம் இந்தியாவிலே அடுகிடை படுகிடையாகக் கிடக்கும் இந்தத் தமிழர் விடுதலைக் கூட்டணி எனபதுதான் என்ன? இது ஓர் மீனா, அல்லது கோழியா? வேட்டைக்காரர்கள் விருந்துக்கு அழைத்ததும், சாப்பாட்டு மேசையை நோக்கி முயல் போலக் கூட்டணி பாய்ந்தோடுவது ஏனோ?

நாங்கள் கருணையின்றியோ அல்லது பகையுணர்வுடனோ இவ்வாறு எழுதுவதாக த. வி. கூ. நண்பர்கள் கருதிவிட வேண்டாம். த. வி. கூட்டணியின் அதிகார பூர்வமான அறிக்கைகள் ஒவ்வொன்றையும் நாம் நுணுகிப் படிக்கிறோம். சில அறிக்கைகளை எமது வாசகர்கள் புரிந்து கொள்வதற்காக வெளியிட்டும் இருக்கிறோம். இப்பத்தியில் நாம் வெளியிடும் கருத்துக்களை இரு முறை படித்துப் பார்த்தே எழுதுகிறோம்.

அதிமரியாதைக்குரிய அமிர்தலிங்கம் (த. வி. கூ. பொதுச்செயலர்) ஒருமுறை, இந்திய இராணுவத தலையீடு குறித்த தி மு. கழகத்தின் கோரிக்கையை **"அநீதியான தென்று கூற முடியாது"** என்றும் கூறியுள்ளார். அது மட்டுமின்றி **"எனது கருத்தையும் அது பிரதிபலிக்கிறது"** எனறும் தெரிவித்துள்ளார்

இந்திய இராணுவ தலையீடு எதற்காக? தமிழ இனப்பிரச்சினையே இல்லாதொழியத், தமிழ் மக்கள் அனைவரையும் சங்காரம் செய்து, இலங்கையின ஒருமைப்பாட்டை நிலைநாட்டத் துடிக்கும் சிறீலங்காவுக்கு உதவியாகவா?

அல்லது ஈழத்தமிழர்களுக்கெனத் தாயகம் ஒன்றை அமைத்துத் தரவா? தி. மு. க. தேர்தல் அறிக்கையில் கூட, தமிழீழம் உருவாக்குவதே தமிழர் பிரச்சினைக்கான ஒரே தீர்வு என்றும், இதை வட்ட மேசையாலோ, சதுரமேசையாலோ அடைந்துவிட முடியாதென்றும் கூறப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# திருப்பலி பூசை கொடுக்கும் போது மதகுரு சுட்டுக்கொலை!

# கத்தோலிக்க தேவாலயத்துள் நுழைந்து பௌத்த சிங்கள ராணுவம் வெறியாட்டம்!

மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை எனும் பெரிய கிராமத்தில் அமைந்துள்ளது புனித அன்னி என்ற கத்தோலிக்க தேவாலயம். இந்தத் தேவாலாயத்தின் பங்குக் குருவாகப் பொறுப்பேற்று இறைபணியும் தமிழ்ப் பணியும் ஆற்றி வந்த அருட்திரு மேரிபஸ்தியான் அடிகளாரையும், அவருடன் உதவிசகு இருந்துவந்த 14 வயதுக் குட்பட்ட இரு சிறுவர் களையும் பௌத்த சிங்களவரான ஜெயவர்த்தனவின் கட்டுப்பாடற்ற பௌத்த சிங்கள இராணுவம், 6- 1 -85 ஞாயிற்றுக் கிழமை காலை புனித ஆலயத்துள் நுழைந்து கேட்டுக் கேள்வியின்றிச் சுட்டுக் கொன்றது. புனித ஆலயத்தில், அருட்திரு பஸ்தியன் அடிகளாரின் குருதி குபீரிட்டுப் பாய்ந்தது அப்படியே தேவ அன்னையின் திருவடிகளில் சாய்ந்தார் அடிகளார்.

ஞாயிற்றுக் கிழமையன்று திருப்பலி பூசை ஒப்புக் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்திலேயே வண அடிகளார் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆராதனையில் கலந்து கொள்ள வந்திருந்த கிறிஸ்தவர்கள் மீது சிங்கள இராணுவம் பரவலாகச் சுட்டதில் பாதிரியாருட்பட பல தமிழர்கள் கொலை செய்யப் பட்டனர்.

மூன்று டிறக் நிறையப் பயங்கர ஆயுதங்களுடன் தேவாலயத்தை முற்றுகையிட்ட பௌத்த சிங்கள இராணுவ வெறியர்கள், தேவாலயத்திலிருந்த புனித தேவமாதா சிலை, மற்றும் பொருட்களை உடைத்து எறிந்தனர். அருட்திரு பஸ்தியனின் பூதவுடலை மட்டும் இராணுவத்தினர் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

இதன் பின்னர், அருகிலுள்ள அருட்செல்விகள் வசிக்கும் கத்தோலிக்க திருமடத்துக்குச் சென்று, அவர்களை வெளியேறுமாறு கட்டளையிட்டனர். அருட்செல்விகள் அனைவரும் வெளியே வந்ததும், உள்ளே புகுந்த பௌத்த சிங்கள இராணுவ மிலேச்சர்கள், அங்கிருந்த விலை உயர்ந்த பொருட்கள் அனைத்தையும் கொள்ளையடித்தனர். பரிசுத்த தேவ பிரசாதத்தைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை.

பௌத்த சிங்கள இராணுவத்தின் மேற்படி கொடுமைகளை எல்லாம மன்னார் பேராயர் தொமஸ் சவுந்தரநாயகம் நேரில் பார்த்துக் கண்டறிந்தார்.

யாழ்ப்பாணப் பேராயர் அருட்திரு தியோகுப்பிள்ளை அடிகளார் சிறீலங்கா ஜனாதிபதிக்கு இச் செயலுக்குக் கடும் கண்டனம் தெரிவித்து கடிதம்எழுதியதுடன்,குருவுக்குரிய முறைப்படி நல்லடக்கம் செய்வதற்கு பஸ்தியான் பாதிரியாரின் பூதவுடலைத் தரும்படி கோரியுள்ளார்.

பாதிரியார் பஸ்தியானின் பூதவுடலை எரித்து விட்ட சிங்கள பௌத்த இராணுவம் தம் பொறுப்பில் அது இல்லையென்று கையை விரித்து விட்டது.

கண் துடைப்புக்காக இதற்கொரு விசாரணை நடத்துவதாகக் கூறியுள்ளான் வெறியன் அத்துலத்முதலி.

கடந்த சில வாரங்களுக்கு முன்பே, மன்னார் வீதியில மெதடிஸ்தமிஷன் பாதிரியார் வன ஜோர்ஜ் ஜெயராசசிங்கம் அடிகளார் சிங்கள பௌத்த இராணுவத்தினரால் வழி மறித்துக் கொலை செய்யப்பட்டதுடன், அவர் பயணம் செய்த ஜீப்பும் அவரது உடலும் எரிக்கப் பட்டது தெரிந்ததே

**கோயபெல்ஸ் ஆகிறான் அத்துலத்முதலி**

வண பிதா பஸ்தியான் அடிகளாரைச் சுட்டுக் கொன்று சடலத்தையும் அபகரித்துச் சென்ற சிங்கள பௌத்த இராணுவ வெறியர்களின் அமைச்சன் அத்துலத்முதலி புதிய கரடி ஒன்றை விட்டுள்ளான். அதாவது வண பிதா பஸ்தியான் அடிகளாரைப் 'பயங்கரவாதிகள்' இந்தியாவுக்குக் கடத்திச் சென்றுள்ளதாக கதை கட்டுகிறான். அவரது ''பலம் வாய்ந்த பாதுகாப்பு வலயத்தை'' மீறி வண பிதா பஸ்தியான் உயிரோடு இந்தியாவுக்கு தப்பி ஓடிவிட்டதாக கூறுவதில் வெட்கமில்லையா இந்த முதலிக்கு? அப்படி யாரும் இந்தியாவுக்கு வரவில்லை என தமிழ் நாடு பொலீஸ் அதிபர், முதலியின் பொய்யை மறுதலித்துள்ளார்.

இட்லருக்கு பொய்யும் புனை சுருட்டும் கூறிப்புழுகுவதற்கு ஓர் கோயபெல்ஸ் அமைந்தது போல, சிங்கள நாட்டின் இட்லர் ஜெயவர்த்தனவுக்குக் கிடைத்திருக்கும் அண்டமகா புழுகன் — நவீன கோயபெல்ஸ் ஆக மாறிவிட்டான் அத்துலத்முதலி.



வங்காலை அர்ச் அன்னம்மாள் ஆலயத்தில் சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட கத்தோலிக்க மதகுரு. வண. மேரி பஸ்தியான் இவர்தான். இறை பணியும், சமுதாயப் பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றி வந்த இவ்விளந் துறவியை சிங்கள பௌத்த வெறிநாய்கள் சுட்டுக் கொன்று விட்டு, சடலத்தையும் கடத்திச் சென்று விட்டனர்.

**அருட்செல்விகள் கண்டன ஊர்வலம்!**

வண பஸ்தியான் அடிகளார், சிங்கள பௌத்த இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டதையும் அவரது பூதவுடலைக்கூடத்தர மறுப்பதையும் கண்டித்து மானிப்பாயில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கத்தோலிக்க திருமடத்தைச் சேர்ந்த அருட் செல்விகள் ஆயிரக்கணக்கானோர் சவப் பெட்டிகளுடன் அவசரகால விதிகளைகளையும் மீறி ஊர்வலம் நடத்தினர்.

அமெரிக்காவிலும் வண. பஸ்தியானின் பெயரால் விசேட பிரார்த்தனைகளும் ஆராதனைகளும் இடம் பெற்றன. வண. பஸ்தியானின் பெற்றோர் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

பௌத்த சிங்களப் படைகளின் இந்த மதவெறியும், இனவெறியும், நமக்குப் புதியவையல்ல; இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள இனத்துக்கு மட்டுமே சொந்தமாக இருக்கவேண்டும்; இலங்கைத் தீவு பௌத்த மதத்துக்கு மட்டுமேயுரிய நாடாக வேண்டும்; ஏனைய சிறுபான்மை மதங்களும் இனங்களும் ஒன்றில் அழிக்கப்பட வேண்டும், அல்லது, சிங்கள பௌத்தத்துடன் இரண்டறக் கலக்கச் செய்யவேண்டும் என்பதே சிங்களவர்களதும், (சிங்கள) பௌத்த சங்கத்தினதும் ஒரே ஆசையாகும். பௌத்த மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இலங்கைத் தீவு முழுவதையும் சிங்களவருடைய தாக்க சிங்கள அரசுகள் கடந்த 30 ஆண்டுகளாக முயன்று வருகின்றன.

தமிழர்களின பொறுப்பிலிருந்த கதிர்காமம் இன்று சிங்களவர் (பௌத்தர்) கைக்குப் போய்விட்டது. சிலாபத்திலுள்ள முன்னேஸ்வரமும் அவ்வாறே போய்க் கொண்டிருக்கிறது.

திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், முல்லைத்தீவு, ஆகிய தமிழர் பிரதேசங்களில் புதைபொருளாய்வு என்ற பெயரில் இருக்கின்ற சிவாலயங்கள். ஏனைய சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டு பௌத்த விகாரங்கள் கட்டப்பட்டு, அதைச் சுற்றி ஆயிரம் சிங்கள பௌத்த குடும்பங்கள் குடியமர்த்தப்படுகின்றன.

1983 இனக்கலவரத்தின் போது, திருகோணமலையில் முப்பதுக்குமேற்பட்ட சைவாலயங்கள் இடிக்கப்பட்டன. தேவாரப்பாடல் பெற்ற கோணேசராலயத்திலேயே சிவலிங்க விக்கிரகத்தைத் தூக்கி எறிந்துவிட்டு அவ்விடத்திலே புத்தர் சிலையை வைக்கவேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகிறது.

இப்போது சிங்கள பௌத்த இராணுவ ஆட்சி நடைபெறும் நேரமாகப் பார்த்து வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை 30 புத்தர் கோவில்களைக் கட்டவும், ஒவ்வொன்றையும் சுற்றி ஆயிரம் பௌத்த சிங்களக் குடும்பங்கள் என்ற வீதத்தில் 30,000 பௌத்த சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்தி, அவர்களது பாதுகாப்புக்கு துப்பாக்கிகள் வழங்கவும், சிறில்மத்தியூவும், அத்துலத் முதலியும் சேர்ந்து திட்டமிட்டுள்ளனர்.

1980இல் வவுனியாச் சந்தியில் இரவோடிரவாகச் சட்ட விரோதமாக முளைத்தெழுந்த புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றுவதாக அமிர்தலிங்கத்துக்கு ஜெயவர்த்தன வாக்குறுதி அளித்திருந்தார். வாக்குறுதி காற்றில் பறந்தது. அந்த இடத்தில் இப்போது நிரந்தரமான கோவிலாக புத்தர் கோவில் உருவெடுத்து விட்டது.

வங்காலை அர்ச். அன்னம்மாள் கோவிலில் சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்று அடையாளம் காணப்பட்டவர்கள் வருமாறு :

வண. பிதா. மேரி. பஸ்தியன அடிகள் (வயது 38) பாலசுப்பிரமணியம் அழகு (வயது 16) நாதன்ஸ் (வயது 14) தங்கச்சியம்மா (வயது 72) சூசையப்பர் சேமன் பீரிஸ் (18) லெனின் பெல்லாரூே (24) ரூபஸ் குரூஸ் (22) குயின்ரஸ் பீரிஸ் (18).

---

3-1-85 வியாழக்கிழமை முல்லைத்தீவு கடற்கரையில் பேசிக் கொண்டிருந்த இரு தமிழ் இளைஞர்களையும், வல்வெட்டித்துறையில் மூன்று தமிழ் மீனவத் தொழிலாளிகள்உட்பட 16 தமிழர்களையும் இன்னும் பல இடங்களிலுமாக மொத்தம் 50 தமிழர்களை சிங்களக் குண்டர் படையான 'கஜபா அணி' கைது செய்து கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

x x x

6-1-85 ஞாயிறு இரவு சாவகச்சேரி நீதிமன்றம் தீவிரவாதிகளால் எரிக்கப்பட்டது. அங்கிருந்து வழக்குகளுக்குரிய ஆவணங்கள், உறுதிகள் அனைத்தும் முற்றாக எரிந்து போயின.

---

## இனி ஒரு தரம்...

பயங்கர முள்வேலி புயலில் சாய்ந்தது
எம்மண் எம்மண் என்று?
எம் மக்கள் கதறுகையில்
துருப்பிடிக்காது எமது துப்பாக்கிகள்
கூர்ந்த நோக்குடன் பாதங்கள் இயங்க
எப்போதும் தயார்;
துப்பாக்கியில் குறிபார்க்க
நெஞ்சின் பொறிகள்
நீண்ட காலத்திற்குப்பின் பரிணமித்தது
ஒரு சகாப்தத்திற்காய்
ஓய்வும் ஒதுங்கலும்
இனி எமக்கில்லை
சாவும் பிறப்பாவதால்
வாகனங்களுடன் அவர்கள் உயிர்களும் போக
நாம் இன்னும் அணி திரள்கிறோம்
எங்கும் கவிழும் இருள்மூட்டம்
அவர்கள் நடைபாதைகளில்.
ஒரு தேசம் எமது கண்முன்
ஒளிர்விடும் நியாயம்
இனியும் பரிணமித்து பரிணமித்து
ரத்தப்பசி தீராததாய் நிகழும்
எம் மாதாவே!
இனி ஒரு தரம் உன்னில் ரவைகள் பாய
அனுமதியோம்
இன்றைய எமது வெளிப்படலில்
கொடுக்கல் வாங்கல் தீர்ந்து
முன்வரும்;
வரலாற்று முடிவு

- பராசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்களக் குடியேற்றங்களை முறியடித்தே தீருவோம்!

தனித்தனி நாடுகளாக இலங்கைத் தீவில் நீண்ட காலமாக இருந்து வந்த தமிழீழத் திருநாட்டையும், சிங்கள நாட்டையும், 1833ஆம் ஆண்டு, தனது நிர்வாக வசதிக்காக, இருநாடுகளின் சம்மதமோ இணக்கமோ இன்றிப் பலவந்தமாக இணைத்து வைத்த ஆங்கில ஏகாதிபத்தியம், 1948ஆம் ஆண்டு பெப்ரவரி நான்காம் நாள் இருநாட்டினங்கள் வாழும் இலங்கைத் தீவுக்கு ஒவ்வாத ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் (Unitary form of Government) சிங்களப் பெரும்பான்மை இனத்திடம் முழுமையான ஆட்சி அதிகாரங்கள் அனைத்தையும் கையளித்துவிட்டு வெளியேறியது.

ஆட்சி அதிகாரம் கையில் கிடைத்தவுடன், சிங்களவர்கள் திட்டம் ஒன்றை வகுத்துக் கொண்டார்கள்; அதுதான் இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களை மெல்லமெல்ல அழித்து இலங்கைத் தீவு முழுவதையும் சிங்கள பௌத்த நாடாக்கிட வேண்டும் என்கிற இன ஒழிப்பு இனக்கொலைத் திட்டமாகும்.

இதன் அடிப்படையில்தான், 1948 ஆம் ஆண்டு இலங்கைக் குடியுரிமைச் சட்டமும், 1949இல் வாக்குரிமைத் திருத்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டு, இலங்கைத்தீவின் முக்கிய பொருளாதாரமான, தேயிலை, ரப்பர், கோப்பித் தோட்டங்களை, தங்கள் உடலை எருவாக்கி, உதிரத்தை நீராக்கி உருவாக்கிக் கொடுத்த பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை, அரசியலுரிமை ஆகியன பறிக்கப்பட்டன. மேற்படி சட்டங்களால், 1947 முதல் பொதுத்தேர்தலில் 8 தமிழ் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமை பெற்றிருந்த மலையகத் தமிழர்களால், 1952 பொதுத் தேர்தலில் ஒரு பிரதிநிதியைத் தானும் தெரிவு செய்யப் படவில்லை.

அன்று சிங்கள நாடாளுமன்றத்தில் மேற்படி சட்டங்களை மிக வன்மையாக எதிர்த்து வாதிட்ட மறைந்த தலைவர் தந்தை செல்வா, "இன்று மலையகத் தமிழர்களின் கழுத்தில் வைக்கப்படும் கத்தி, நாளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் இலங்கையின் பூர்வகுடித் தமிழர்களின் கழுத்திலும் வைக்கப்படுவது நிச்சயம்" என்று தீர்க்கதரிசனமாக எடுத்துரைத்தார்.

இவ்வாறு இலங்கைத்தீவில் வாழ்கின்ற தமிழ்மக்களின் அரசியல் பலம் சரி அரைவாசியாக வெட்டி வீழ்த்தப்பட்டது.

இதையடுத்து, வடக்கு கிழக்கு மாகாணங்கள் என்று வெள்ளையனால் பெயர் சூட்டப்பட்ட தமிழீழ நாட்டின் பூர்வகுடித் தமிழர்களை அழித்தொழிக்கும் அடுத்த நடவடிக்கையிலிறங்கியது சிங்கள ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கம்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அவர்களைச் சிறுபான்மையினராக்கச் சதித் திட்டம தீட்டிச் செயற்படுத்தப்பட்டது.

அதுதான், "விவசாயக் குடியேற்றம்" என்கிற திரைமறைவில், சிங்களவர்களை அரசாங்கமே திட்டமிட்டு பெருவாரியாகத் தமிழீழ நாட்டில் குடியமர்த்தி அவர்களுக்கு சகல உதவிகளும் வழங்குகிற திட்டமாகும்.

தமிழீழ நாட்டிலேயே பல இலட்சம் மக்கள் விவசாயத்துக்குச் சொந்த நிலமின்றித் தவிக்கையில், அரசாங்கக் காணிகளைத் தமிழருக்கு வழங்காமல் சிங்கள நாட்டிலிருந்து சிங்களவர்களைக் கொண்டுவந்து பெருவாரியாகக் குடியேற்றி அவர்களுக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுத்தது சிங்கள அரசு.

இதனால் தமிழ் மக்களின் முக்கிய தலைநகரும், சைவ மக்களின் தேவாரப் பாடல் பெற்ற கோணேஸ்வரர் குடியிருக்கும் கோட்டமும் தென்கிழக்காசியாவிலேயே ஈடிணையற்ற இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளதுமான திருகோணமலை மாவட்டத்தில், கந்தளாய், அல்லை, பெரிய விளாத்திக்குளம், மூதூர் போன்ற பகுதிகளிலும், திருகோணமலை நகரிலும், பல்லாயிரக்கணக்கான பௌத்த சிங்களக் காடையர்கள் குடியேற்றப்பட்டார்கள்.

இதன் விளைவாக 'சேருவிலை' என்ற தனிச் சிங்களத் தொகுதி— ஏராளமான குடியேற்ற நிலங்களை உள்ளடக்கியதாகத் திருகோணமலை மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்டது. இத்தொகுதியை உருவாக்குவதில் தமிழர் வியாபாரக் கூட்டணியினரும் சிங்களவர்களுடன் ஒத்துழைத்து, தமிழர் நிலத்தைத் தாரை வார்த்தனர்.

இதே போலத் தமிழீழத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றத்தினால், தனிச் சிங்கள மாவட்டமாக அம்பாறை என்ற புதிய மாவட்டம் உருவாயிற்று, அம்பாறை என்னும் தனிச் சிங்களத் தொகுதியும் தோன்றியது.

வவுனியா மாவட்டத்திலும் பதவியா, கொக்குத் தொடுவாய், நாயாறு, ஒட்டிசுட்டான் போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள், சிங்கள அரசினால் குடியமர்த்தப்பட்டனர்.

**ஆக, 30 ஆண்டுக்காலச் சிங்கள ஆட்சியில் 8000 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட தமிழீழ நாட்டில் 2000 சதுர மைல் நிலப்பரப்பு சட்ட விரோதமாகச் சிங்கள அரசுகளினால் அபகரிக்கப்பட்டதுடன், மூன்று இலட்சம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு உள்ளனர்.**

தமிழர் நிலத்தை எப்படியும் அபகரித்துவிட வேண்டும் என்ற சூழ்ச்சித் திட்டத்தின் மூலகர்த்தா இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஜெயவர்த்தன கட்சிதான்.

தமிழர் பிரதேசம் தனி ஒரு மாநிலமாக உருவெடுத்துவிடும்; சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படும்; என்கிற காரணங்களை முன்வைத்த இன்றைய கிழட்டுநரி ஜெயவர்த்தன, 1958இல் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்தது கண்டிக்கு யாத்திரை செய்து, சிங்கள பௌத்த பிக்குகளையும் பயன்படுத்தி அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தான்.

1977இல் பிரதமராகச் சிங்கள நாடாளுமன்றத்தில் இருந்தபோதும்—இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களுடைய பூர்வீகத் தாயகம் என்கிற கருத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று அமிர் கூட்டணியினரைப் பார்த்துக் கூறியதும் இதே இனவெறியன் ஜெயவர்த்தனவேதான்.

## எண்ணம்

தமிழர்களின் தனிநாடு போராட்டத்தை முறியடிக்க ஒரே வழி, தமிழர்களைத் தெற்கே சிங்களவர் மத்தியிலும் சிங்களவர்களை வடக்கிலும் குடியேற்றுவதுதான் என்று கூறியவனும் இதே ஜெயவர்த்தனதான்.

இன்றைக்கு தமிழர் தாயகத்தைத் தனது முப்படைகளால் முற்றுகையிட்டுக் கொண்டே—தமிழர்களை அவர்கள் சொந்த மண்ணிலே சுட்டுக்கொன்றும், முல்லைத்தீவு முதல், மன்னார்வரை, கரையோரங்களில் வாழ்ந்து தொழில் செய்து வந்த 2 இலட்சம் தமிழ் மீனவர்களை அங்கிருந்து விரட்டியும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடியும், தமிழ் பெண்களைக் கற்பழித்தும், பயங்கர இராணுவக் காட்டாட்சியைக் கட்டவிழ்த்து விட்டுள்ள ஜெயவர்த்தன, 30000 சிங்கள பௌத்த காடையர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கி வடமாகாணத்தில் குடியேற்றப் போவதாகக் கொக்கரித்திருக்கிறான்.

தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு, தினசரி 25 தமிழர்களைச் சுட்டுக் கொன்று குவித்து இட்லரின் பாணியில் "இறுதித்தீர்வு" (Final solution) காணத் துடிக்கும் ஜெயவர்த்தன, தமிழர் நிலத்தை அபகரிப்பதற்கு—அதன் மூலம் பூண்டோடு தமிழர் இனத்தையே கருவறுக்க முடிவு செய்துவிட்டான். 30,000 சிங்களக் குடும்பங்கள் என்னும் போது, சுமார் 1,50,000 சிங்களவர்களைக் குடியேற்றத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இனத்தொகை விதாசாரப்படி குடியேற்றம் என்பதெல்லாம் வெறுங் கண் துடைப்பு. இனத்தொகை விதாசாரப்படி குடியேற்றம் என்றால், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் நாள் இருந்த விதாசாரமே நியாயமானது; அதுவே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது.

**1948ஆம் ஆண்டுக்குப் பின் தமிழீழ நாட்டில் சிங்கள அரசு குடியேற்றிய அனைத்துச் சிங்களவரும் என்றோ ஒருநாள் தமிழீழ மண்ணிலிருந்து வெளியேற்றப்பட (Decolonise) வேண்டியவர்களே.**

**ஜெயவர்த்தன அரசுக்கு எச்சரிக்கிறோம்; அப்பாவி சிங்களவர்களை தமிழர் நாட்டில் குடியேற்றி, வீணாக அந்த மக்களை கொன்று குவிக்கும் நிலையை தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு ஏற்படுத்தாதீர்கள்!**

கண்ணை இழந்தாலும் தனது மண்ணில் ஓர் அங்குலத்தையும் தமிழன் இழக்கமாட்டான். மண்ணை இழந்த மக்கள் ஒரு தேசிய இனமாக வாழவும் முடியாது.

## அன்றே எச்சரித்தார் சிந்தனைச் சிற்பி!

**சிங்கள அரசு, அஹிம்சை இயக்கம் நடத்தும் தமிழர் மேல், பாராளுமன்றப் பெரும்பான்மையாலும், படைபட்டாளப் பலாத்காரத்தினாலும், ஆட்சியை நடத்திட முயன்றாலும், அது நடக்காது. தமிழர்களைப் பிரிவினைக்குத் தள்ளிய சிங்கள அரசு, அவர்களை மேலும் சுதந்திரத்திற்காகப் பலாத்கார மோதலுக்குத் தள்ளக்கூடாது. பலாத்கார மோதல் வளர்ந்தால், இலங்கை முழுவதும் மட்டுமல்ல, தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்தும் சிங்களவருக்கு எதிராகப் பலாத்காரத்தைக் காணும். ஆங்காங்கே தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகளாக மாறி உலகெங்கும் பலாத்காரம் பரப்புவார்கள். இன்னும் அன்னியர் தலையீடு கட்டாயம் உண்டாகும்."**

**-சிந்தனைச் சிற்பி அமரர் சி. கதிரவேலுப்பிள்ளை**

**(ஆதாரம் : தமிழரசு வெள்ளிவிழா மலர் 1974)**

## பொங்கலன்று போலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை

திரு. வே. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப்புலி இயக்க கொரில்லாக்கள் இருவர் 14-1-85 அன்று கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஜீப் ஒன்றில் வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஒரு பொலிஸ் சார்ஜண்ட், மற்றோர் சாதாரண பொலிஸ்காரர் ஒருவர், ஆகியோர் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கட்டளையிட்டனர். புலிகள் நிற்காமல் செல்லவே ஜீப்பில் விட்டுத் துரத்தினர். ஒரு தேனீர்க் கடைக்குள் புலிகள் புகுந்து மறைந்திருந்தனர். மேற்படி பொலிஸ் அதிகாரிகள், தேநீர்க் கடைக்குள் நுழையவே விடுதலைப் புலிகள் தயாராக வைத்திருந்த துப்பாக்கி விசைகளை அழுத்தினர். அந்த இடத்திலேயே மூன்று பொலிஸாரும் தலையில் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர். விடுதலைப் புலிகள் மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து சென்றனர்.

## ஐ.நா. சபை முன்னால் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழ் ஈழத்தைச் சிறைக் கூடமாக்கி அங்கு தமிழர்களைக் கொலை செய்துவரும் சிங்கள அரசைக் கண்டித்தும், இலங்கையில் தமிழர்கள் எதிரிகளாக கருதப்பட்டு அங்குள்ள சிங்களப் படைகளினால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற கொடுமைகள் நடப்பதை விபரித்தும், இவற்றை தடுத்து நிறுத்தி தமிழ் மக்களின் உயிர் உடமைகளைப் பாதுகாப்பதற்கு அமைதி காக்கும் ஐ. நா. படையை அங்கு அனுப்ப வேண்டுமெனக் கோரியும், நியூயோர்க்கிலுள்ள இலங்கைத் தமிழர் சங்கம், ஐ. நா. சபைக் கட்டடத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் மேற்கண்ட கோரிக்கைகளை யுள்ளடக்கிய மனுவொன்றை ஐ. நா. பொதுச் செயலாளரிடமும், அமெரிக்காவிலுள்ள இந்திய தூதர் திரு என் கிருஷ்ணனிடமும் கையளித்தது. இதில் மேற்படி சங்கத் தலைவர் திரு ஈஸ்வரா ஒப்பமிட்டுள்ளார்.

## இராணுவக் கல்வி கற்பதற்கு அத்துலத்முதலி மலேசியா பயணம்

இஸ்ரேலிய 'மொசாத்' உளவுத் துறையினராலும், பிரிட்டிஷ் கூலிப்படைகளாலும், தமிழீழ விடுதலைப்புலிகளை வெற்றி கொள்வது சாத்தியமற்றது என்பதைப் புரிந்து கொண்ட சிங்கள யுத்த மந்திரி அத்துலத்முதலி, இப்போது மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் இராணுவக் கல்வி பயிலப் போயிருக்கிறார், அந்த நாடுகளில் கொம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை அந்த நாட்டு அரசுகள் எவ்வாறு அழித்தொழித்தன என்பதைப் படித்து வந்து, தமிழீழ விடுதலைப் புலிகளை அந்த முறையிலேயே அழித்தொழிக்கப் போகிறாராம். அத்துலத்முதலிக்காக அனுதாபப் படுகிறோம் — தனக்கடாச் சிங்களம் தன் பிடரிக்கே சேதம்!

அங்கிருந்து பின்னர் தங்கள் எஜமானாகிய ரீகனைச் சந்தித்துப் பேசுவதற்கு ஜெயவர்த்தனவின் கடிதத்துடன் அமெரிக்காவுக்குப் போயிருக்கிறான் முதலி.

www.tamilarangam.net



# ஐநூறு சிங்கள இராணுவத்துடன் 12 மணி நேரம் போராடிய ஐந்து விடுதலைப் புலிகள்!

## வீரமரணத்தை தழுவிக்கொண்ட காப்டன் ரவீந்திரனின் துணிவு!

அன்புத்தம்பி,

ஈழத்தமிழர்க்குத் தமிழரசு வேண்டும்—தமிழர்களே தமிழீழத்தை ஆளவேண்டும் என்கிற விடுதலை முழக்கத்துடன் தந்தை செல்வாவின் தலைமையில் தோன்றிய தமிழரசுக் கட்சியின் பாசறைதான் கோப்பாய்த் தொகுதி.

சாதி வேறுபாடுகள், மதவேறுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் அனைத்தையும் களைந் தெறிந்து, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகக்




கட்டியெழுப்புதற்கு தன் வாழ்வையே அர்ப்பணித்த கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கத்தின் வழி காட்டுதலிலே வளர்ந்தவர்கள் கோப்பாய் தொகுதி வாழ் தமிழ் மக்கள்.

அப்படிப்பட்ட மான மறவர்கள் வாழும் தொகுதியிலே அச்சுவேலி எனும் கிராமம்—இலட்சிய வீரர்களின் பாசறைகளிலே ஒன்று! அங்குதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல்வேறு பாசறைகளிலே ஒரு சிறிய பாசறை அமைந்திருந்தது!

விடுதலைப் புலிகள் இயக்கம் முளைவிட்ட நாளிலிருந்து அந்த இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு—இயக்கத்தின் உண்மையான விசுவாசியாகி—தலைவர் தம்பி பிரபாகரனின் நம்பிக்கையைப் பெற்று—கொரில்லாப் போர்ப் பயிற்சி பெற்று—இயக்க நிதி மற்றும் ஆயுதப் பொறுப்புக்களையேற்று திறம்பட நிர்வகித்து வந்த விடுதலைப்புலிதான் 'பண்டிதர்' என்று இயக்கத் தோழர்களால் அன்புடன் அழைக்கபபடுகின்ற தம்பி கே. ரவீந்திரன்.

அவருடைய சிறிய பாசறையொன்று அச்சுவேலிக் கிராமத்தின் உள்ளே அமைந் திருநதது. விடுதலை உணர்வு கொண்ட பொதுமக்களே அவர்களுக்கு உணவு வழங்கி அன்போடு ஆதரித்து வந்தனர். 'மக்கள் இயக்கம்' ஆயிற்றே புலிகளின் விடுதலை இயக்கம்!

சில காலத்திற்கு முன் ரவீந்திரன் புலோலியிலே சைக்கிளிலே சென்று கொண்டிருந்தார். எதிர்பாராமல் எதிரே மூன்று சிங்கள இராணுவ வீரர்கள் குறுக்கிடுகின்றனர். அவர்களுடைய கைகளிலே இயந்திரத் துப்பாக்கிகள்.

'நில்! என்ற உத்தரவு பிறக்கிறது!

ரவீந்திரன் ஒரு கணம் நின்றார்—கண்மூடிக் கண் திறப்பதற்குள் அவர் மறைத்துவைத்திருந்த துப்பாக்கியால், இராணுவத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்தார்!

சிங்கள சிப்பாய் ஒருவன் மண்டையிலே குண்டு பாய்ந்து குருதி வெள்ளத்திலே கிடந்தான். மற்றவர்கள் இருவரும் தலை தெறிக்க அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

ரவீந்திரன் வெற்றிப் புன்னகையோடு திரும்பினார். இத்தனைக்கும் ரவீந்திரன் ஏதோ பெரிய ஆஜானுபாகுவல்ல; மெலிந்த தோற்றம். அகவையோ ஆக 24. தொய்வு நோய் அவரை வாட்டினாலும், தொய்யாமல் தமிழீழ விடுதலைக்குப் போரிட்டு வந்தார்.

1985 ஆம் ஆண்டு சனவரி 9 ஆம் நாள் அதிகாலை நான்கு மணி.

ரவீந்திரனும் மேலும் 14 விடுதலைப்புலிகளும் அயர்த்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

அச்சுவேலி கிராமம் முழுவதையுமே எத்தனையோ தடவை சல்லடை போட்டும் சிங்கள இராணுவத்தினால், அதுவரை கண்டு பிடிக்கப்படாத பாசறை அது!

ஆனால், எந்தத் துரோகி கொடுத்த தகவலோ, ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் 42 டிறக்குகளில், சத்தமின்றி வந்து அந்த வீட்டைச் சுற்றி மூன்று வியூகம் அமைத்துக் கொள்ளுகிறது. மொத்தம் 500 பேர் இருப்பார்கள்.

இதைவிட மூன்று இராணுவக் கவச வண்டி வேறு;

துப்பாக்கி வேட்டுக்கள் அந்தப் பாசறையை நோக்கித் தீர்க்கப்படுகின்றன. பதைபதைத்து எழுந்த பண்டிதர் பார்த்தார் யன்னலூடாக; முற்றுகையிட்டுள்ளது சிங்கள இராணுவம் என்பதைக் கண்டார்.

அவர்கள் 500 பேர்—நாம் ஐந்தாறு பேர்!

எனினும் கலங்கவில்லை பண்டிதர்; விடுதலைப் புலிகளுக்குத்தான் அச்சம் எனபது என்ன வென்றே தெரியாதே;

அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா என்பதுதானே அவர்களது வீரப்பண்!


வெளியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட, உள்ளிருந்தும் பண்டிதரின் கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியும் இடைவிடாமல் சுட்டுக் கொண்டேயிருக்கிறது.

ஏனைய புலிகளும் எதிர்த்தாக்குதல்களை நடத்துகின்றனர். கைக்குண்டுகள் வீசப்படுகின்றன; காயங்கள் பட்டு அலறுகின்றனர் சிங்களச் சிப்பாய்கள்! ஒரு கோபுரக் கவச வண்டி நொறுக்கப்படுகிறது.

12 மணித்தியாலங்கள், ஐந்தே ஐந்து விடுதலைப்புலிகள 500 சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போராடியிருக்கின்றனர்.

இப்போராட்டத்தின் மத்தியில் பத்து விடுதலைப்புலிகள் சிங்கள இராணுவ அரணை உடைத்துக்கொண்டு அங்கிருந்து தப்பி வெளியேறி விடுகிறார்கள் பண்டிதரின் கட்டளைப்படி;

பிற்பகல் 3மணியளவில் எதிரிகளின் குண்டுகளை மார்பிலேற்று வீரமரணத்தை



தழுவுகின்றனர் பண்டிதரும், அவருடன் நின்ற நான்கு விடுதலைப்புலிகளும்!

காணுமுயலெய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது''

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கொப்ப—'சுழிபுரம் கொலைகள்' போன்ற நிராயுதபாணிகளான முயலுக்கு அம்பெய்யும் வீணரைவிட—500 சிங்கள இராணுவத்துடன் பல மணி நேரம் போரிட்டு வீரச்சாவை அணைத்துக் கொண்ட பண்டிதா ரவீந்திரனின் புகழ் பெரியது. சாவையும் ஒரு வாழ்வாக்கி வருபவர்கள் புலிகளன்றோ?

நோய் நொடியால் மாண்டவர்கள்
கோடி கோடி
நூற்றிலொரு பெயர்தானும்
எட்டவில்லை!
தாய்நாடு வாழ்கவென
மடிந்தவீரர்
சரித்திரத்தில் பொன்னெழுத்தாய்
நிலைத்துநிற்பர்!

ஆம், தம்பி ரவீந்திரன் சாகவில்லை; சரித்திர நாயகனாகிவிட்டான்! வீரவேங்கைகள் வீழ்வதுமில்லை; விடுதலைப்புலிகள் சாவதுமில்லை!

500 பேர் சேர்ந்து 5 பேருடன் 12 மணி நேரம் போராடியே அவர்களைக் கொல்ல முடிந்தது என்றால், இதில் வீரர்கள் யார், கோழைகள் யார் என்பதை உலகே புரிந்து கொள்ளும்.

கப்டன் ரவீந்திரனின் வீரமரணத்தைப் பற்றிக் குறிப்பிட்ட தமிழர்களின் எதிரியான சிங்கள யுத்த மந்திரி பின்வருமாறு சொன்னான்—

''அங்கிருந்த சில தீவிரவாதிகளுக்கும், எனது பாதுகாப்புப் படையினருக்குமிடையே கடுஞ் சமர் நடந்தது. பிரபாகரனின் வலது கரமான விடுதலைப்புலி இயக்கத்தின் தலைவர், ஞான பண்டிதன் எம்-16 துப்பாக்கி யொன்றைக் கையில் அணைத்த படியே இறந்து கிடந்தார்''

ஆம், மரணத்தின் போதும் கையிலேந்திய ஆயுதத்தைக் கீழே போடாமல், அதை அணைத்தபடியே வீரச் சாவை ஏற்றுக் கொண்ட இளைய வீரன் ரவீந்திரனின் ஆற்றலுக்கு நிகர் உண்டா?

விடுதலைப் புலிகளில் ஒருவரையும் உயிரோடு பிடிக்க முடியவில்லையே என்கிற ஆத்திரத்தில் வெறிகொண்ட சிங்கள இராணுவம், அயலிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து கண்ட கண்டபடி சுட்டுத்தள்ளுகிறது.

இளம் தமிழ்க் குழந்தைகளையெல்லாம் 3 வயதுப் பிஞ்சுகளை யெல்லாம் பிடித்துவந்து ஓரிடத்தில் கட்டிப்போட்டு பெற்றோல் ஊற்றி உயிரோடு எரிக்கிறது; சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் 67 வயது முதியவரும் ஒருவர்.

அப்பகுதியில் வாழும் 50க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் ''பயங்கரவாதிகள'' என்று முத்திரை குத்தப்பட்டு தாக்கப்பட்டுக் கைது செய்யப்படுகின்றனர்!

மாவீரன் பண்டிதரின் பாசறையிலிருந்த ஒரு சில ஆயுதங்களைக் கைப்பற்றி விட்டு, யானை பார்த்த குருடன் போல, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையே அழித்தொழித்து விட்டது போல கொக்கரிக்கிறான் அத்துலத் முதலி!

போகப் போகத் தெரியும்; புலிகளின் பாய்ச்சல் அப்போது புரியும் என்பதையே அத்துலத் முதலிக்கு கூறிவைப்போம்!

கோவை மகேசன்



மதவாச்சியில் சிங்களத்தினர் களால் அண்மையில் கொலைசெய்யப் பட்ட அப்பாவித் தமிழர் சடலங்கள்.

www.tamilarangam.net



# ஜெயவர்த்தன அரசுக்குப் பெரிய பயமுறுத்தலாக விளங்குவது தமிழீழ விடுதலைப் புலிகளே!

## அமெரிக்க ஏடு 'நியூஸ் வீக்' அபிப்பிராயம்!

இலங்கைத் தவின் மக்கள் தொகையில் 13 சதவீதத்தினரான தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே 1977 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இன மோதல்களில் பல நூற்றுக் கணக்கான உயிர்கள் இதுவரை பறி போய்விட்டன. இந்த இரத்தக்களரிகளின் காரணமாக, பாக்கு நீரிணைக்கு இப்பால் 18 மைல் தொலைவில் உள்ள இந்தியாவுக்கு, 40,000 தமிழர்கள் அகதிகளாக ஓடி வந்துள்ளனர். இப் பிரச்சினைகளின் விளைவாக இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்குமிடையே கடுமையான பதட்ட நிலைமையும் உருவாகி உள்ளது.

அண்மையில் சனாதிபதி செயவர்த்தன, தன்னுடைய கட்டுப்பாடற்ற முரட்டுத்தனமான இராணுவத்தைச் சீர் படுத்துவதற்காக இஸ்ரேலில் இருந்து பயங்கரவாத எதிர்ப்புத் துறைப் பயிற்சியாளர்களை கொழும்புக்கு வரவழைத்துள்ளார். இதன் நோக்கம் தமிழீழ விடுதலைக்காகப் போராடும் கொரில்லாக்களை பேரம் பேசும் மேடைக்கு இழுப்பதற்காக இருக்கலாம். ஆனல், உடன்படிக்கை எதுவும் வெற்றிகரமாக ஒப்பேறும் வாய்ப்பு இருள் சூழ்ந்தே காணப்படுகிறது.

"அரசியல் தீர்வு எதுவும் காணப்படக் கூடிய சூழ்நிலை என்றாவது ஏற்படும் எனபதற்கு எதுவித அறிகுறியும் இல்லை" என்று கருத்துத் தெரிவித்துள்ள கொழும்பில் உள்ள மேற்கத்திய இராசதந்திரி ஒருவர், "உடன்பாடு எதுவும் காணப்படாதபட்சத்தில், இலங்கைத்தீவு போர்க்களமாகவே நீண்ட காலத்திற்கு விளங்கப் போகிறது" என்று கூறினர்.

இன்று சிறீலங்காவாகவும் அன்று 'சிம்லான்' ஆகவும் அழைக்கப்பட்ட இத்தீவு, பிரிட்டனிடமிருந்து 1948 இல் சுதந்திரம் பெற்ற போது, சிறிய பிரச்சினைகளே இருந்தன. அப்போது ஆளுங் கட்சியில் தமிழர்களும் சிங்களவர்களும் இருந்தனர். எட்டு ஆண்டுகள கழித்து சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக்கப்பட்டதன் காரணமாகத் தமிழர்கள் இரண்டாந்தரக்குடி மக்கள் ஆக்கப்பட்டனர்.

தமிழர்கள் உடனடியாகவே, கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் தமக்குப் பாரபட்சம் காட்டப் படுவதாக புகார் செய்ய ஆரம்பித்தனர். அதே சமயம் தமிழர்கள் பெரும்பாலாக வாழும் பிரதேசங்களுக்கு 'மாநில சுயாட்சி' வேண்டும் என்று தமிழர் எழுப்பிய கோரிக்கையும். செவிடன் காதில் சங்கொலியாக அலட்சியப் படுதத்தப்பட்டது.

முதலாவது பாரதூரமான இனப்படுகொலை 1977-இல் ஏற்பட்டு இரண்டு கிழமைகள் நீடித்த போது, பலநூறு தமிழர்கள் கொல்லப் பட்டனர். இரண்டு இலட்சம் தமிழர்கள் உயிர்ப் பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணத்துக்கு சென்றனர். கொரில்லா நடவடிக்கைகள் வளர்ச்சி அடைந்து வந்தன. 1983 இல முதல் தடவையாக 13 சிங்கள இராணுவத்தினரை, தமிழீழ விடுதலைப்புலிகள் கொனறனர். சிங்களக் குண்டர்கள் 400க்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்றொழித்ததுடன் 60,000 தமிழர்களை அகதிகளாக்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், ஏனைய கொரில்லாக் குழுக்களும் தங்கள் நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து, இராணுவ டிறக்குகள் மீது அதிரடித் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

யாழ்ப்பாணம் இப்பொழுது சிங்கள இராணுவ ஆட்சியின் கீழ் உள்ளது. கடுமையான ஊரடங்கு நடைமுறையிலுள்ளது. வங்கிகளும், பாடசாலைகளும் மூடப்பட்டுவிட்டன. மிக அரிதாக நடைபெறும் அரசாங்க பேருந்துகளில் மட்டும், போக்குவரத்து செய்ய வேணடுமென கட்டுப்பாடு போடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளே இன்று சிங்கள இராணுவத்துக்கு மிகப்பெரிய பயமுறுத்தலாக விளங்குகின்றனர். நீண்ட கால கொரில்லாப் போருக்குப் புலிகள் தயாராக உள்ளனர். அவர்களது இலட்சியம் "சுதந்திர ஜனநாயக தமிழ் மக்கள் குடியரசு" ஒன்றை தமிழீழத்தில் நிறுவுவதே

கொழும்பு அதிகாரிகளின் கருத்துபபடி, புலிகள் இந்தியாவில் காடுகளுக்குள் இரகசியத் தளங்களையும் பயிற்சி முகாம்களையும் வைத்துள்ளனராம்.

பிரச்சினையின் சரிபாதிக்குக் காரணமாக விளங்குபவர்கள் பெரும்பான்மையான சிங்கள இராணுவத்தினரே. "**உலகிலேயே கட்டுப் பாடற்ற இராணுவம் சிங்கள ராணுவமே**" என்று குறிப்பிட்ட கொழும்பிலுள்ள ஒரு மேற்கத்திய ராஜதந்திரி, "**பழி வாங்கும் நடவடிக்கையாக, வெறி பிடித்த கும்பலாகச் சென்று, கணணில் காணும் தமிழர் சகலரையும் சிங்கள இராணுவம் சுட்டுத்தள்ளுகிறது**" என்கிருர்.

கடந்த ஆகஸ்டில் தமிழர் தலைநகரான மன்னரில் இதுவே நடைபெற்றது. சிங்களக் கடற்படை ஒன்றை விடுதலைப்புலி இயக்க கொரில்லாக்கள் தாக்கி அழித்ததால் ஆத்திரமடைந்த சிங்கள இராணுவம், இரு மணி நேரம் வெறிக் கூத்தாடி. மக்களை தாக்கிக் கொன்றனர்; நகரத்தையே அழித்தனர்.

இத்தகைய கட்டுபாடற்ற தனது இராணுவத்தைக் கட்டுப்படுத்தி வழி நடத்த இராணுவ ஆலோசகர்களை ஜெயவர்த்தன உலகெங்கும் தேடிக் கடை விரித்தார். எவரும் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை. இறுதியாக இஸ்ரேலை பிடித்துக் கொண்டார்.

கடந்த அக்டோபரில் சிறீலங்காவுடன் அதுவரை ராஜரீகத் தொடர்பின்றி இருநது வந்த ஜெருசலேம், சிறீலங்காவுடன உறவு கொண்டது. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இந்த "நலன் காக்கும் பிரிவை" இஸ்ரேல் ஆரம்பித்தது. 'நியூஸ் வீக்' குக்கு கிடைதத தகவலின்படி, இஸ்ரேலிய பயங்கரவாத முறியடிப்பு நிபுணர்கள், சிறீலங்கா இராணுவத்துக்கு, விசேட புலனய்வுத் துறையிலும பயங்கரவாத முறியடிப்பு முறைகளிலும் பயிற்சியளித்திருக்கின்றனர்.

ஜெயவர்த்தன தனது படை பலததின் சக்தியை பெருக்கிக் கொண்டதுடன், 1982ஆம் ஆண்டு 45 மில்லியன் டொலர் ஆக இருந்த இராணுவச் செலவை, கடந்த ஆண்டு 200 மில்லியன் டொலராக அதிகரித்தார்.

பிரிட்டனிலிருந்து விசேட விமானப் படை ஊழியர்களையும் (SAS) ஜெயவர்த்தன அழைத்தார். அதே சமயம் தமிழ் மிதவாதிகளுடன் சமாதானம் பேசிக்கொண்டும் இருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியார் தனிநாடு கோரிக்கையைக் கைவிடும் பட்சத்தில், தமிழ் பிரதேசங்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சியை வழங்குவதாக அறிவித்தார்.


ஆனல், ஜெயவர்த்தனவின் ஐ. தே. கட்சியிலுள்ளவர்களாலும் ஏனைய பௌத்தர்களாலும் கௌரவிக்கப்படும் கட்சியும் சுயாட்சியை வலியுறுத்தும் அரசியற் கட்சியுமான தமிழர் விடுதலை கூட்டணி இதை நிராகரித்ததால், இம்முயற்சி இடையிலே முறிந்தது. ஜெயவர்த்தன தனது திட்டங்களை வாபஸ் பெற்று தமிழ் பகுதிகளில் தேர்தலுக்கு நாள் குறித்துள்ளார். இதனல் இந்தியாவிடமிருந்து கடுமையான கண்டிப்புக்கு இலங்கை உள்ளாகி உள்ளது. இந்த இருநாடுகளுக்குமிடையே சில வருட காலமாகவே இருந்து வந்த நெருக்கம் குறைந்த நிலை இப்போது மோசமடைந்துள்ளது

இந்தியக் கரையோரக் காவல் கப்பல் ஒன்று இலங்கைக் கடற்படையினரை அண்மையில் கைது செய்து சிறை வைத்துள்ளது. இலங்கையின் கடற்படை, இந்திய எல்லைக்குள் புகுந்து இந்திய மீனவரைச் சுட்டதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்போ தனது கடற்படை இலங்கைக் கடலிலேயே நின்றது என்கிறது.

கப்பல் பிடிபட்டதை யொட்டி, சின்னஞ்சிறு இலங்கைக் கடற்படை மிகுந்த கவலையடைந்துள்ளது. கொழும்பு அரசினல், தமிழர்களின் ஆயுத ரீதியான எதிர்ப்புப் போராட்டத்தை அழித்தொழிக்க முடியுமா என்பது மிகப்பெரிய சந்தேகமாகவே உள்ளது. மாநில சுயாட்சியை வழங்குவதன் மூலம், மிதவாதிகளான தமிழ் தலைவர்களை சுதந்திரக் கனவிலிருந்து விடுவித்து தனது பக்கம் எப்படியாவது ஜெயவர்த்தனவினல் ஈர்க்க முடியுமா? என்பதும் சந்தேகமே. இவை நடைபெறவில்லையானல், இலங்கையில் இன்னும் பல ஆண்டுகளுக்கு அமைதியைக் காணவே முடியாது.

(Newsweek—Jan 21—1934 By Edward Behr கட்டுரையின் சுருக்கம்)

## Sri Lanka's Turmoil



*Sri Lankan troops in Jaffna: 'Among the most undisciplined soldiers in the world'*

NEWSWEEK/JANUARY 21, 1985

---

### நீர்கொழும்பில் தமிழர் இருவர் உயிருடன் எரிப்பு

நீர்கொழும்பில் தமிழ் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பல கடைகள் எரிக்கப்பட்டதுடன், இரண்டு தமிழர்களைச் சிங்களக் காடையர் உயிர் உடன் பிடித்துப் பெற்ரேல் ஊற்றி எரித்துள்ளனர்.

### இனத் துரோகி சுட்டுக்கொலை

சிங்கள அரசுக்குத் தகவல் கொடுக்கும் ஜேம்ஸ் என்ற தமிழ்த் துரோகி மன்னர் விடத்தல்தீவில் தமிழீழ விடுதலைப் போராளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டான். இது 10-12-84 இல் இடம் பெற்றது.

### பெட்ரோல் "பவுசர்கள்" அபகரிப்பு

சிங்கள அரசாங்கத்துக்குச் சொந்தமான முழுமையாக நிரப்பப்பட்ட் நான்கு பெட்ரோல் "பவுசர்களை" தமிழீழ விடுதலைப் போராளிகள் கிளிநொச்சியிலிருந்து துப்பாக்கி முனையில் கடததிச் சென்றனர். பின்னர் பெட்ரோல் முழுவதும் எடுக்கப்பட்ட நிலையில் மூன்று வெற்று 'பவுசர்களை' மட்டும் இராணுவம் கண்டெடுத்ததாம்.

### அத்துலத் முதலி நடுக்கம்

தமிழீழ விடுதலைப்போராளிகள் தமமை எந்த நேரமும் கடத்திச் சென்று விடக் கூடும் என்ற பீதி சிங்கள தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியைப் பிடித்து ஆட்டத் தொடங்கியுளளது. இரவில் கனவிலும் "ஐயோ விடுதலைப்புலிகள், விடுதலைப் புலிகள்" என்று அரற்றி வருகிறராம். இதனல் இப்பொழுது அவருக்கு விசேட பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**வீரவேங்கை**

எஸ். ஆர். கோனவ மகேசன்

ஆசிரியர் : வீர வேங்கை

15, முதல் மெயின் வீதி

காந்திநகர், அடையார்

சென்னை-600020.

ஆண்டுச் சந்தா

ரூ. 30 மட்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் ராணுவ நடவடிக்கைக்கு E·P·R·L·F· பாராட்டு!

தமிழ் பேசும் மக்களின் பூர்வ குடித்தாயகமான தமிழ் ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கென்பண்ணை. டொலர் பண்ணை, ஆகிய இடங்களில் ஏற்கெனவே குடியேறியிருந்த மலையகத் தமிழர்களை அங்கிருந்து சிங்களத் துருப்புக்கள் துப்பாக்கி முனையில் வெளியேற்றிவிட்டு, அந்த இடங்களில சிங்களக் கொலைகாரர்களையும் கேடிகளையும் குற்றவாளிகளையும் குடியமர்த்தி அவர்களுக்கு ஆயுத பயிற்சியும் தந்து வந்தது. ஆனால் இச் சிங்களக் கேடிகளை ', அப்பாவிச் சிங்களவர்'' என்றும் அவர்களுக்கு எதிராக திரு. பிரபாகரன தலைமையில இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கை எடுத்தது தவறென்றும் உண்மை தெரியாத சிலர் புலம்பித் திரிகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் மேற்படி இராணுவ நடவடிக்கையை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை அமைப்பும் (EPRLF) வாழ்த்தி வரவேற்றுள்ளது. ஈழச் செய்தி 'டிசெம்பர்' இதழிலிருந்து மேற்படி செய்தியைக் கீழ தருகிறோம்: —

ஈழத்தின் எல்லைப் புறங்களில் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

இஸ்ரேலிய சியோனிஸ்டுகள் பாலஸ்தீனத்தில் திட்டமிட்டு நடத்திய ஆக்கிரமிப்புப் பாணியில சிங்கள சோவனிஸ்டுக்களும் ஈழ மண்ணில் ஆக்கிரமிப்பு நடத்துகின்றனர்.

ஈழ மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்தெடுத்து விடுவதன் மூலம் ஈழமக்களுக்கெதிரான அழித்தொழிப்பு நடவடிக்கையைச் சுலபமாக்கப் பாசிச அரசு திட்டமிட்டுள்ளது.

தெரிந்தெடுக்கப்பட்ட இனவெறிக் குண்டர்களை ஈழ எல்லைப் புறங்களில் குடியேற்றி அவர்களுக்குத் தமது கூலிப்படைகளின பாதுகாபபையும் பாசிச அரசு வழங்கியுளளது.

இக் குடியேற்றங்களில் உளள இனவெறியருக்கு நவீன ஆயுதங்களையும் பாசிச அரசு பரிசளித்துள்ளது. இக் குடியேற்றங்களைப் பாதுகாக்க இராணுவ முகாமகளும் நிரந்தரமாகவே நிறுவப்பட்டன.

பயங்கரமான சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைப் ''புனர் வாழ்வு'' அளிப்பது என்னும் பெயரில் ஈழ எல்லைப் புறங்களில் பாசிச அரசு குடியேற்றியது.

சிறீலங்கா வெலிக்கடை வதை முகாமில் ஈழப் போராளிகளையும், தமிழ்க் கைதிகளையும் படுகொலை செய்த இனவெறி மிருகங்கள் முல்லைத் தீவு மற்றும் வவுனியா எல்லைப் புறங்களில் குடியேற்றப்பட்டன.

''கென்பண்ணை'' ''டாலர் பண்ணை'' ஆகியவற்றில் குடியிருந்த மலையகத் தமிழ் மக்களை விரட்டி அடித்து விட்டு சிங்கள இனவெறியர்கள் ஆக்கிரமித்துக் கொணடனர். மலையக மக்களை நடுவீதிக்கு விரட்டி விட்டுக் கூலிக்குண்டர்கள், பண்ணைகளில் குடியேறினர்.

மலையக மண்ணில் இனவெறித் தீயில் விறகாய் எரிந்து, உயிர் வாழ்வதற்கான உரிமையே மறுக்கப்பட்ட மலையகத் தமிழர்களை விரட்டிவிட்டுக் குடியேறிய கொலைக் குற்றவாளிகளான ஆக்கிரமிப்பாளர்கள் மீது தான் ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். 'தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்'' இந்தப் பயனுள்ளதும், போற்றத்தக்கதுமான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக அறிகிறோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கையில் 80 பேரினவாதக் காடையர்கள் கொல்லப்பட்டார்கள் என்று எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இப் பயங்கரவாதக் கும்பலிடமிருந்து பயங்கர ஆயுதங்களையும் போராளிகள் பறிமுதல் செய்ததாக எமக்குச் செய்தி கிடைத்துள்ளது.

ஆனால் தனது கூலிக்குண்டர்களை இழந்ததால் அதிர்ச்சியடைந்துள்ள சிறீலங்கா அரசு தவறான செய்திகளைப் பரப்பி வருகிறது.

அப்பாவி மக்களை போராளிகள் தாக்கியதாக ஒப்பாரி வைக்கிறது. தனது பட்டாளங்கள் 20 போராளிகளைக் கொன்று விட்டனர் எனக் கொக்கரிக்கிறது. ஆனால் எதிரிப்படைகளால் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட போராளிகள் எவரும் கொல்லப்படவில்லை.

சாதாரண தமிழ் மக்கள் முப்பதுக்கும் மேறபட்டோர் கொலைப் பட்டாளங்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சகல விடுதலை அமைப்புக்களும் மக்களைப் பாதுகாப்பதில உறுதியுடன் செயல்படுவதால் பாசிச படைகள் தரை மூலம் நடத்திய தாக்குதல்களை இப்போது வானவழி ஹெலிகாப்டர் மூலம் மேற்கொள்கின்றன.

சாதாரண சிங்கள மக்கள் மீது ஈழ மக்களுக்கோ விடுதலை அமைப்புகளுக்கோ எவ்விதமான குரோதமும் கிடையாது. மக்களை நேசித்து மக்களுக்காகப் போராடும் ஈழ விடுதலைப் போராளிகள் சாதாரண சிங்கள மக்களைக் கொனறு குவிப்பதாக மக்கள் விரோதப் பாசிச அரசு செய்யும் பிரச்சாரம் உண்மைக்கு மாறானது.

ஈழ விடுதலை என்பது சிங்கள மக்களுக்கு எதிரான தலல; அவர்களின் அடிமைத்தனம் அகல்வதற்கும் ஈழம் விடுதலை பெறுவதன் மூலமே வழி பிறக்கும்.

சிங்கள முற்போக்கு, ஜனநாயக சக்திகளுடன் பரஸ்பர உறவை விரும்பும் ஈழவிடுதலை அமைப்புக்கள் சிறீலங்கா அரசையும், அதன் மக்கள் விரோத, பாசிச போக்குக்குத் துணைபுரியும் சக்திகளையும் உறுதியுடன், விடாப்பிடியாக எதிர்த்துப் போராடுவது உறுதி.

## கொக்கிளாயில் தமிழீழ விடுதலை தேசிய கீதம்

கொக்கிளாய் கடலோரக் கிராமத்தில் தமிழீழ விடுதலை போராட்ட வீரர்கள் 48 பேரும் அபபகுதியைச் சேர்ந்த 300க்கு மேற்பட்ட தமிழர்களுமாகச் சேர்ந்து ஒலி பெருக்கிமூலம் தமிழீழ நாட்டின் விடுதலைக் கீதத்தை இசைத்ததாகவும் புலிக் கொடியை ஏற்றியதாகவும் சிங்கள தேசிய பாதுகாப்பு அமைச்சே அறிவித்தது.

முருங்கனில் முந்திரிப் பண்ணையில் குடியேற்றப் பட்டிருந்த 100 க்கு மேற பட்ட சிங்களவர்களை தமிழ்த் தீவிரவாதிள் அங்கிருந்து விரட்டி அடித்துவிட்டனர்.

## இந்திய வம்சாவளி தமிழர்களின் அகதிமுகாம் எரிப்பு

மலையகத்தில் தோட்டங்களில் வேலை செய்து வந்த (இந்திய வம்சாவளி) மலையகத் தமிழர்களைச் சிங்களவர்கள் இனக் கலவரங்களின் போது அடித்துத் துரத்தினார்கள் அல்லவா? இவ்வாறு துரத்தப் பட்ட தமிழர்கள் ஈழத் தமிழர்கள் பெருமபான்மையாக வாழும் தமிழீழமே தஞ்சம் என்று கருதி, வவுனியாவுக்கு வந்து பெரிய குளம் என்னுமிடத்தில மூன்று தற்காலிக அகதி முகாம்களில வாழ்ந்தனர். இவர்களது அகதி முகாம்களுக்கு இனவெறி பிடித்த சிங்கள இராணுவம் தீயிட்டு எரித்துள்ளது. இராணுவமே எரித்தது என்பதை அமைச்சர் தொண்டைமானின் இ தொ. கா. வும் உறுதிப்படுத்தி உள்ளது. இதனால் 500 தமிழ்க் குடும்பங்கள் வாழ வழியின்றி நடுத்தெருவில் நிற்கின்றன.

## வாருங்கள்!

வாருங்கள்
நிதி திரட்டுவோம்
அகதிகளுக்கல்ல
ஆயுதங்களுக்கு...!
ராவணப் பூமியில்
போதிமரங்கள்
கோடரிகளாக
நாட்டின்
பங்காளிகள்
கதறிச்சாக...!
ஒ......
புத்தனெனன
இவர்களுக்கு
தலைகீழாகவா
தர்மத்தைப்
போதித்தான்!
வாருங்கள்
'நாம்'
எல்லாவற்றையும்
நேராகவே
போதிப்போம்!
சிங்களத் தீவென்று
பாரதி
பாடிவிட்டான்
இது
அறியாமையல்ல
அச்சுப்பிழை!
வாருங்கள்
அதை
மாற்றுவோம்!
'எங்களவர்
தீவென்று'
புத்தகத்திலல்ல...
புரட்சியில்!

x x x

தமிழீழம்
தமிழன்
தனியாய்ப்
போராடிப்
பெறவேண்டியது.
பிச்சையால் அல்ல
வாருங்கள்
உலகுக்கு
உணர்த்துவோம்!
புலிகளின் தாகம்
சலுகைப்புல்லல்ல
சுதந்திரப்
'பண' என்று!

x x x

கொலைகாரர்களிடம்
ஒப்பந்தத்தைவிட
நாம்
கொரில்லாக்கள்
ஆவதே
உத்தமம்!
வாருங்கள்!
ஈழச்சாசனத்தை
காகிதத்தைவிடுத்து
கருவினுலை
பிரசவிப்போம்!

x x x

இது,
ஏங்கி அழும்
காலமல்ல
பொங்கிஎழும்
நேரம்
இன்றைய்
செய்திதானே
நாளைய
வரலாறு!
வாருங்கள்
வீரவேங்கைகளின்
தியாகக்
குருதியின் மூலம்
ஈழவரலாற்றை
புதிதாய்
எழுதுவோம்!

x x x

வாருங்கள்
நிதிதிரட்டுவோம்
அகதிகளுக்கல்ல
ஆயுதங்களுக்கு!

— எம். விஜயகுமார்
திருப்பூர்

---

(4ம பக்கத் தொடர்ச்சி)

கடைசியாகக் கொழும்பில் நடந்த சுற்றுப்பேசசில சனாதிபதி செயவர்த்தன, பிரச்சினைக்குத் தீர்வாக தம்முடைய எண்ணப்படி ஓர் நகல் சட்டத்தை முன் வைத்துள்ளார். (இப்போது அதுவும் கைவிடப்பட்டுவிட்டது.)

இந்த நகல் சட்டப்படி, தமிழர் பெருவாரியாக வாழும் மாநிலங்களுக்கு, இந்தியாவிலுள்ளது போன்ற சுயாட்சியோ அல்லது தனி நாடோ வழங்கப்படவில்லை. ஜே. ஆருருடைய ஒற்றையாட்சி — ஒரே இலங்கை என்ற தூணிலேயே இதுவும் செதுக்கப்பட்டுளளது. இதையே 'ஜனநாயகத்தில் பங்கேற்பு' என்று ஜே. ஆர். குறிப்பிடுகிறார்.

த. வி. கூட்டணி, இந்த அடிப்படையை — அதாவது தனிநாடும் இல்லை, பிராந்திய சுயாட்சியும் இல்லை. மாவட்ட சபைக்கு 'அதிகாரமற்ற' அதிகாரம் மட்டுமே என்கிற நிலையை ஏற்கிறதா என்ற நிலைமை முதலில் புரிந்தாக வேண்டும்.

கொழும்பு அரசுடன் அமிர்தலிங்கம் பேச்சு வார்த்தை நடத்தி, சில விளக்கங்களைக் கோரியுள்ளதாகக் கேள்விப்படுகிறோம. ஜெயவர்த்தனவின் அடிப்படை நோக்கத்தை அமிர் ஏற்பது போலவும், அங்கும் இங்கும் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதே அமிர்தலிங்கத்தின் விருப்பம் என்ற கருத்தை இது கொடுக்கிறது. இக்கருத்து சரியா தப்பா என்பதை அமிர்தலிங்கமே விளக்க வேண்டும். இலங்கையிலுள்ள தமிழர்கள் எதை எவ்வாறு பெறுவது என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டுமே தவிர இங்குளளோரல்லர்.

இனித்தான் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிந்தனை எழுகிறது! கொழும்பு அரசுடனான பேச்சு வார்த்தை இடைநிறுத்தப்படலாம். ஏனெனில், அந்த அரசு தமிழர்களின் வாழ்வுக்குப் போராடுகின்ற தமிழ்த் தேசியவாதிகளைப ''பயங்கரவாதிகள்'' என்று பெயர் சூட்டி அழித்துவிட முன்னிற்கிறது. எதிரிகளின் மண்ணில் செயற்படுவது போலச் செயற்படுகிறது.

ஈழத்தமிழர்கள் தங்களுக்குள்ளே கூடி, மனம்விட்டுப் பேசி, விவாதித்து, அடிப்படைக் கேள்விக்கு ஒருங்கிணைந்த பதிலைக் கண்டாக வேணடும். ''எமக்கு எனன வேண்டும் என்பதே அவர்களால் பதில் காணப்பட வேண்டிய ஒரே கேள்வியாகும்.

ஒடுக்குமுறையாளர்களுக்கும ஒடுக்கப்படுபவர்களுக்குமிடையே ஏதாவது சூழ்ச்சி எவராலாவது திணிக்கப்பட்டாலன்றி, மகோன்னதமான பெரிய இலட்சியங்கள் யாவும் சிறிய நிகழ்வில இருந்தே தோன்றுகின்றன.

சிலரை ஈவிரக்கமற்ற கொலைகாரர்கள் என்று குற்றஞ்சாட்டிக் கொண்டே, அவர்களுடன் ''எந்த ஒரு மேசை''யிலும் உட்கார்ந்து பேசுவது, எந்த ஒரு சாமான்ய மனிதனும் செய்ய முடியாத காரியமாகும். அதையோ கூட்டுப் பொறுப்புடன் செய்யும்போது அதைத் ''தூக்கில் தொங்கும் மனிதனின்'' விளையாட்டு என்று கூறலாம்.

புரட்சியோ அன்றி விடுதலைப் போரோ, ஒரு தேநீர் விருந்தாக முடியாது. அது தியாகம் நிறைந்தது; ஒரு இலட்சியத்துக்காக உயிரையே அர்ப்பணிப்பது. குறிக்கோள் என்னவென்பது புரியவில்லை. பாக்குநீரிணையின் இப்பக்கத்தில் பேசப்படும் பேச்சுக்கள் நீரிணையின் மறுபக்கத்தில் செயலாக மாற வேண்டும்.

மீண்டும் நாம் எழுப்பும் கேள்வி இதுதான: கனவான்களே! தயவு செய்து உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை எம்மிடம் ஒளிவுமறைவின்றிக் கூறுங்கள். உங்களின் முடிவை நீங்களே தீர்மானியுங்கள். இவ்வாறு தீர்மானித்து விட்டால், உங்கள் ஆதரவாளர்களுக்கு இருந்துவரும் கலக்கமும குழப்பமும் தீரும். Enough is Enough!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகச் செய்திகள்

21-12-84 அன்று திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில், தொண்டபாலன், சோமசுந்தரம் பாலச்சந்திரன், இலையம்பலம் இரத்தினசிங்கம், கதிர்காமத்தம்பி துரைராசா (கட்டைபறிச்சான்) ஆகிய நான்கு அப்பாவித் தமிழர்களையும், சிங்கள இராணுவக் கொலைஞர்கள் எதுவித காரணமுமின்றிச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

x x x

ஆசிகுளம் என்ற இடத்தில் அதே நாளில் நடைபெற்ற தேடுதல் வேட்டையின் போது. மூன்றே மூன்று வயது நிரம்பிய பங்சிளங் குழந்தையான நாகராசா என்ற 'மிகப் பெரிய பயங்கரவாதியை' சிங்கள அரசின் சீருடை அணிந்த மிருகங்கள் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொன்றன. இச்சிறுவனைவிட மேலும் 5 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

x x x

23-12-84 அன்று இருபாலை கிராமத்தை சிங்கள வெறிப் படைகள் முற்றுகையிட்டுச் சோதனையிட்ட போது 3 வயதுப் பிஞ்சுக் குழந்தை தேவராசா யோகன், இராசையா குணம் (வயது 28) வல்லி சின்னத்தம்பி (வயது 60) அடையாளம் காணப்படாத மற்றொருவர் உட்பட நான்கு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அங்குள்ள 250 தமிழர் வீடுகளிலிருந்த பெறுமதியான அனைத்துப் பொருட்களும் சிங்கள இராணுவத்தினால் கொள்ளையடிக்கப்பட்டன. இதனால் 250 குடும்பங்கள் அகதிகளாகத் தவிக்கின்றன.

x x x

சில்லாலையில், டிசெம்பர் 12, 13 (1984) திகதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 22 பேரை காணவில்லையென்றும், பண்டத்தரிப்பில் கைது செய்யப்பட்டவர்களில் 4 தமிழ் இளைஞர்களைக் காணவில்லையென்றும் மாதர்சங்கத் தலைவி திருமதி. பேர்சி, அத்தனுசியார் புகார் செய்துள்ளார்.

x x x

24-12-84 ஞாயிறு அன்று, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும், ஸ்ரான்லி வீதிச் சந்திக்குமிடையே சிங்கள இராணுவம் திடீரென மக்கள் மீது சுட்டபோது, எஸ். சிவராஜா வயது (36) அவரது மகன் நிமலன் (வயது 10) ஆகியோர் கொல்லப்பட்டனர். சிவராசாவின் மற்றோர் மகனான கோவலன (வயது 9) உட்பட மேலும் நான்கு தமிழர்கள் குண்டடிபட்டு யாழ் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

x x x

25-12-84இல், சிங்களப் பகுதியிலுள்ள தொடங்கஸ்லந்தையில் டாக்டராகப் பணியாற்றி வந்த சவுந்தரநாயகம் ஜெகசோதிநாதனும், அவருடைய மனைவி அன்னலட்சுமியும், தொடங்கஸ்லந்தையிலிருந்து புறப்பட்டு பஸ்ஸில் பயணம் செய்யும் போது, சிங்கள இனவெறிக் குண்டர்களினால் பஸ்ஸுக்குள் வைத்துக் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

x x x

முல்லைத்தீவில் உழவு இயந்திரம் ஒன்றில் பயணம்செய்த விவசாயிகளான ஒன்பது தமிழ் இளைஞர்கள முல்லைத் தீவில் சிங்கள ராணுவத்தினால் வழிமறிக்கப்பட்டு, வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுக் கொலலப்பட்டனர்.

வவுனியாவிலுள்ள தமது நெல்வயல்களைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றிருந்த நல்லூரைச் சேர்ந்த சுந்தர் ராஜ், அங்கு சிங்கள இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டார், இவருக்கு மனைவியும் ஆறு பிள்ளைகளும் உண்டு.

x x x

12-12-84 பிற்பகல், யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில்வைத்து ரெறன்ஸ் சில்வா, நாணயக்காரா ஆகிய இரு சிங்கள பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தீவிரவாதக் குழு ஒன்றினால் கடத்தப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன்ர். இவர்களை விடுவிப்பதாக இருந்தால் ஐம்பது இலட்ச ரூபா பெறுமதியான தங்கம் தரப்பட வேண்டுமெனத் தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். கடத்தப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் இந்தியாவில உளளார்களா என்பதை விசாரிக்குமாறு தமிழ்நாடு ஐ ஜி மோகன் தாசிடம சிறீலங்கா பொலீஸ் அதிபர் ருத்ரா ராஜசிங்கம் கோரினர். சம்பந்தப்பட்டவர்கள் தமிழ்நாட்டுக் தக் கொண்டு வரப்படவில்லை என்று மோகன்தாஸ் மறுத்துள்ளார். இவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர் என்று கடத்தியவர்கள் இது வரை அறிவிக்கவில்லை.

மேற்படி பொலீஸ் அதிகாரிகள் கடத்தல் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விரிவுரையாளர் டி. மகேஸ்வரனும், பல்கலைக்கழக மாணவர் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

x x x

இலங்கைத்தீவிலுள்ள சகல சிங்கள இளைஞர்களுக்கும் சிங்கள இராணுவத் தொணடர் படையான சிங்களக் குண்டர் படையினர் 600 பேருக்கும், 'ராக்கட்' தாக்குதல் பயிற்சி சிங்கள விமானப் படையினாலும், 'மொசாத்' கும்பலினாலும், அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாகத் திருகோணமலையிலுள்ள சகல சிங்கள இளைஞர்களுக்கும் அதிரடிப் பயிற்சி முதல் விசேட போர்ப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. திருகோணமலையை அமெரிக்காவுக்குத் தாரைவார்ப்பதை எதிர்க்கும் தமிழர்களை இராணுவத்துடன் சேர்ந்துகொன்றொழிக்கவே இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

x x x

மன்னார் உயிலங்குளம், அடம்பன். கிராமங்களில் வயல்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் வேலை செய்து கொணடிருந்தபோது அங்கு திடீரென வந்த சிங்கள இராணுவம், கேட்டுக்கேள்வியின்றி துப்பாக்கியால்சுட்டுத் தள்ளியது; இதில் 419 தமிழர்கள் அதே இடத்தில் செத்தனர். இவர்களை ஒன்ருகக் குவித்து சிங்கள இராணுவம் தீவைத்து எரித்தது; இதில் தப்பிய நூறு தமிழர்கள் குழந்தைகளுடன் இராமேசுவரத்துக்குப் படகில் வந்துள்ளனர்.

x x x

மட்டக்களப்பில் தமிழீழப் போராளிகளைச் சிங்கள அரசுக்கு காட்டிக் கொடுத்து வந்த நான்கு தமிழ் துரோகிகளை, விடுதலைப்போராளிகள் 31-12-84 இல் சுட்டுக் கொன்றனர். கொரில்லா இயக்கத்தில் சேர மறுத்ததனாலேயே மேற்படி நால்வரும் கொல்லப்பட்டதாக சிங்கள வானொலி செய்தியறிக்கையில் கூறியது.

சிங்களத் தேசியப் பாதுகாப்பு அமைச்சு தொடங்கியுள்ள சிங்களவரை மட்டுமே கொண்ட ஆயுதம் தாங்கிய கண்காணிப்புப் படையினர், திருகோணமலையில் 31-12-84 வரை, எதுவித காரணமுமின்றிப் பத்துத் தமிழர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

x x x

முல்லைத் தீவு காடுகளில் சிங்கள ராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்திய போது, அப்பகுதியிலுள்ள கிராமங்களிலிருந்து 27 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர். அவர்களைப் பின்புறமாகக் கையைக்கட்டி விட்டுப் பின்புறமாகச் சுட்டுக் கொன்றனர்.

x x x

இருபாலை என்னும் ஊரில் சாலை அருகே ஒரு தமிழ்ப் பெண் தனது குழந்தையை இடுப்பில் வைத்தபடி சென்று கொண்டிருந்தபோது. அவ்வழியேவந்த இராணுவத்தினர் அப் பெண்ணுக்கு குறி வைத்துச் சுட்டனர். அது குழந்தை மீது படவே, குழந்தையைப் போட்டுவிட்டு தாய் ஓடி விட்டார். அருகே வந்த இராணுவத்தினர் மேற்படி குழந்தை சாகாததைக் கண்டு மீண்டும்சுட்டு அதைக் கொன்றுவிட்டுச் சென்றனர்.

x x x

மாங்குளம் காவல் நிலையத்தில், வெடி குண்டுகளைக் கையாள்வது எப்படி என்று சிங்கள இராணுவ சிரேட்ட அதிகாரி ஒருவர், சிங்களப் பொலீசாருக்கு பாடம் புகட்டிக் கொணடிருந்த போது' எதிர்பாராமல் வெடிகுண்டு வெடித்து, இராணுவ மேஜரும், மூன்று சிங்களப் பொலீஸ் கொமாண்டோக்களும் உயிரிழந்தனர்.

x x x

சிங்கள அரசாங்கம், தமிழீழத்தின் கடற்கரையோரப் பிரதேசங்களை எலலாம், கண்காணிப்பு வலயமாக்கி, வழமையான மீன் பிடித் தொழிலை நம்பித் தமது அன்றாட வாழ்வை நடத்திய இரணடு இலட்சம் தமிழ் மீனவர்களுககு மீன்பிடிக்கும் உரிமையை மறுத்தும் அவர்களைக் கடலோரங்களிலிருந்து விரட்டியடித்தும் சுட்டுக் கொன்றும் வருவதால், பீதியடைந்த ஈழத்தமிழ் மீனவர்கள். 58 பேர், பெண்கள் குழந்தை குட்டிகளுடன் கடுங் குளிரில படகில் பயணம் செய்து 24-12-84இல் நாகப்பட்டினம் வநது சேர்ந்துள்ளனர்! 400 பேர் யாழ்ப்பாணக் கரையிலிருந்து 5 இயந்திரப் படகுகளில் புறப்பட்டதாகவும், வந்து சேர்ந்த 58 பேர் தவிர ஏனையோர் நிலையென்ன வென்று தெரியவில்லையாம்.

x x x

மயிலிட்டி, பலாலி, அராலி, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2000 தமிழ் மீனவர்கள், சிங்கள இராணுவ அரசின் சட்டதிட்டங்களையும் மீறி 2-1-85 புதன் கிழமையன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். மீன் பிடிக்கும் உரிமையை மீண்டும் கொடு, இராணுவ, கடற்படைக் கொடுமைகளை நிறுத்தி, உணவுத் தட்டுப்பாட்டை நீக்கு, என்ற முழக்கங்களுடன் இந்த எழுச்சி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

x x x

கண்டியிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த லாரி ஒன்றை சிங்களக் கூலிப் படைகள் வழிமறித்து, லாரி டிரைவரையும், உடன்வந்தவர்களையும் தாக்கி, அடித்து இம்சித்ததுடன், "விடுதலைப்புலிகளுக்கா இந்த உணவு கொணடு செல்கிறீர்கள்" என்று கேட்டதுடன, லாரியைத் திரும்பவும் கண்டிக்கே எடுத்துச் செல்லுமாறு கட்டளையிட்டுள்ளனர். இதுவும் 2-1-85 அன்றே நடைபெற்றது.

x x x

"தீவிரவாதிகளைப் பிடித்துக் கொடுத்து அரசிடமிருந்து சன்மானம் பெறுங்கள்" என்று அச்சிட்ட விளம்பரங்களை ஹெலிகொப்டரில் வானிலிருந்து தமிழ்ப்பிரதேசங்களில் சிங்கள விமானப் படை வீசி வருகிறது.

x x x

யாழ்ப்பாண மருத்துவமனையில் ஏற்கெனவே அத்தியாவசிய சிகிச்சைக்கான மருந்துகள் கருவிகள் எதுவும் இல்லையென்பது தெரிந்ததே. இப்போது அதிமுக்கியமான "பிராணவாயு சிலிண்டர்களையும்" அனுப்பாமல் வெறிபிடித்த, மனிதத்தன்மையற்ற பௌத்த அரசு நிறுத்தி விட்டது.

x x x

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த ஆசீர்வாதம் டயஸ் என்ற தமிழ் மீனவர் கடற்படையினரால் 3-1-85 இல் சுட்டுக் கொல்லப்பட்டார். இதே தினத்தில் அல்வாய், நெல்லியடி, திக்கம் ஆகிய இடங்களில் 15வயதுக் குட்பட்ட சிறுவர்களுட்பட 100தமிழர்களைச் சிங்கள இராணுவம் கைதுசெய்து கண்காணு இடததுக்குக் கொண்டு சென்றுள்ளது.

x x x

பளைக்கும் கொடிகாமத்துக் கிடையே உள்ள 40 அடிநீள ரயில்வே பாலம் ஒன்று தீவிரவாதிகளால் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. 3-1-85இல் நடைபெற்ற இச்சம்பவம், ஒரு குறிப்பிட்ட ரயிலில் வரவிருந்த இராணுவத்தை அழிப்பதற்குச் செய்யப்பட்டதாயினும் திட்டமிட்டபடி அந்த ராணுவ ரயில் வரவில்லை.

x x x

"கல்லூரிக்குச் செல்லுகின்ற தமிழ் மங்கையரை சிங்கள ராணுவம் வழிமறித்து. தமது டிறக்குகளில் கடத்திச் செல்கிறார்கள்; கை, கால்களைக் கட்டிப்போட்டு நிர்வாணமாக்குகிறார்கள்; பின், உடல் முழுவதும் முத்தம் இட்டார்கள். சித்திரவதை செய்தார்கள். மாணவிகள் மயங்கி விழுந்ததும், விட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள்" இவ்வாறு தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவியான ஜனனி வேதனையோடு விவரித்துள்ளார்.

x x x

4-1-85 வெள்ளிக்கிழமை நண்பகல் வவுனியாவில் தேவராசா (வயது 45) என்ற தமிழரும் அவரது தங்கை கனகாம்பிகை (வயது 22) யோகா (வயது 13) யோகேஸ்வரி (வயது 17) ஆகிய நால்வரையும், வீட்டுக்குள் புகுந்து சிங்கள இனவெறிப்படைகள் சுட்டுக்கொன்றன. தேவராசாவின் மகன் கடுமையான துப்பாக்கிக்காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். வவுனியாவில் இளைஞர்களைக் கண்டபடி சுட்டனர். ஒரு தமிழ்ப் போராளி சைனைட் குடித்து உயிர் துறந்தான்; 500தமிழர்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

இதே திகதியில் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த லாரி ஒன்றை வழிமறித்த சிங்கள இராணுவம், அதை ஓட்டி வந்த டிரைவரையும் லாரியில் வந்த ஏனைய மூவரையும் சுட்டுக்கொன்றது. இதில் உயிரிழந்த ஒருவர் பெயர் எம். சுந்தரம் (வயது 30)

x x x

4-1-85 காலை யாழ்ப்பாணம் அரசடி வீதியில் இராணுவ வெறியர்கள் அநாவசியமாகச் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒய்வுபெற்ற சங்கீத ஆசிரியர் கதிர்காமர் தாமோதரம்பிள்ளை (வயது 62) மற்றும் இருவரும் உயிரிழந்தனர். இருவரில் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை இராணுவம் திருடிச் சென்றது.

x x x

யாழ்ப்பாணம் அரசாங்க மருத்துவமனையின் பிரபல டாக்டர் சிவஞானவேல், இராணுவ சட்டவிதிகளுக்கு அமையத் தமது காரைப் பயன்படுத்தும் உத்தரவுப் பத்திரத்தைத் தலைக்கமாக முன்புறத்தில் ஒட்டியிருந்தும், வெறிகொண்ட சிங்கள இராணுவம், அவரது காரை அடாத்தாக வழிமறித்து, அனுமதிப் பத்திரத்தையும் கிழித்து எறிந்துவிட்டு காரை அடித்துச் சேதப்படுத்தியதுடன், டாக்டரையும் தாக்கியுள்ளனர். பின்னர் இச் சம்பவத்துக்காக வட பிராந்திய இராணுவத் தளபதி. டாக்டர் சிவஞானவேலிடம் மன்னிப்புக் கேட்டாராம்.

x x z

3-1-85 அன்று சட்ட பூர்வமான கடவுச்சீட்டுடன் தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் இந்தியா வருவதற்காக தலைமனாரை நோக்கி வந்து கொண்டிருந்த 20 தமிழர்களைச் சிங்கள இராணுவம் வழிமறித்துத் தாக்கிவிட்டு. அவர்களை இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். இதில் ஓர் கல்லூரி மாணவரும், முஸ்லிம் வியாபாரியும் இருந்தனர் அதே நாளில், ஏருவூர் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் 81 தமிழர்களைச் சிங்கள இராணுவம்பிடித்துச் சென்றது.

x x x

5-1-85 சனிக்கிழமை பகல் யாழ்ப்பாண மாநகரை முற்றுகையிட்டு, யாழ் நகருக்குப் பல்வேறு அலுவலகளாக வந்திருந்த 36 வயதுக்குட்பட்ட 500 தமிழர்களைக் கைது செய்து இராணுவ டிறக்குகளில் ஏற்றினர். இப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பேர் கிறிஸ்தவ பாதிரிமார்களாவர். இவர்கள் கண்காணாத இரகசிய இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. பளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விறகு ஏற்றி வந்த லாரியை வழிமறித்து அதில் பயணம் செய்த மூன்று தமிழர்களையும் டிரைவரையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணத்தில் பட்டினிசாவுகள் தோன்றும் அபாயம்!

## லண்டன் "டைம்ஸ்" நிருபர் சிறப்பு செய்தி!

இலங்கைத் தீவில் வாழ்ந்து வரும் சிறுபான்மை மக்களான தமிழர்கள் மீது சிறீலங்கா சிங்கள இராணுவம், கொடூரமான முறையிலும், ஒழுக்கமற்ற முறையிலும் பயமுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தமது மனம் போன போக்கில தமிழர்களைக் கொலை செய்வது, கண்ட கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்வது, தாக்குவது, சித்திரவதை செய்வது, கொள்ளையடிப்பது, கட்டுப்பாடின்றி நடப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டிருக்கும் துப்பாக்கி ஏந்திய சிங்கள இராணுவத்தினர் வட பகுதியில வாழும் தமிழர்களை நிரந்தரப பீதியுடன் வைத்துள்ளனர்.

தனிநாடு கோரும் தமிழ் கொரில்லாக்களுடன் மட்டுமே மோதுவது என்ற நிலை மாறி, இப்போது நேரடியான தமிழ் - சிங்கள யுத்தமாகியுள்ளது இலங்கையின் நிலை. தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்குமாநிலத்தில், எவரையும் சுட்டுக் கொல்லுவதற்கு பெரும்பான்மைச் சிங்கள இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடுகளும் தமிழ்த் தீவிரவாதிகளை முறியடிப்பதற்கு எடுக்கப் நடவடிக்கைகளும், தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை முடமாக்கிவிட்டன. கடற்கரைப் பிரதேசங்கள் 'ஆள் அரவமற்ற' பிரதேசமாக்கப்பட்டுள்ளதால் குறைந்தது 25000 மீனவர்கள் தம் தொழிலை இழந்துள்ளனர். ஆக, மீனவர் சமுதாயத்தின் மத்தியிலும், மக்கள தலைவர்களின் மனங்களிலும் ஏற்கெனவே அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் யாழ்ப்பாணத்துக்கு உணவு சாலை மேலதிகமாக வராவிடின், மக்கள் பட்டினியால் சாகக் கூடிய நிலை தோன்றும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

பெண்கள் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காகத் தங்கள், நெக்ளேஸ்கள் காப்புக்கள் ஆகியவற்றை விற்று வருகின்றனர். அவ்வாறு இருந்தும், அந்த நகைகளைக் குறைந்த விலையில் வாங்குவதற்குக் கூட சில வர்த்தகர்களிடம் பணத் தட்டுப்பாடு நிலவுகிறது.

பெண்கள், குழந்தைகளுட்பட பலலாயிரக்கணக்கான தமிழர்கள், இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுவிட்டனர். பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சுற்றிவளைத்துப் பிடிக்கப்பட்டு, இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். தங்கள் பிள்ளைகள் எங்கேயிருக்கிறார்கள் என்பது கூடப் பெற்றோருக்கு தெரிவதில்லை இலங்கையில் "காணாமல் போனவர்களின்" பட்டியலில் தமிழ் இளைஞர்களும் இடம்பெற்று விடுகின்றனர். இராணுவப் பாதுகாப்பில் இருக்கும் தமிழர்கள் அடித்து உதைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர் என்பதற்குப் போதிய ஆதாரமுண்டு.

மாலை 6 மணியிலிருந்து காலை 5 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுலிலிருப்பதால், அவசர நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியாது. இதனால் மக்கள் சாகிறார்கள் யாழ்ப்பாண மருத்துவமனையிலோ பிராணவாயு முதல் உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துகளும் கிடையாது.

கடுமையான ஊரடங்கும் அதன கீழ் விதிக்கப்பட்டுள்ள வரம்புககு மீறிய விதிகளும் பெர்மிட் முறைகளும், போககுவரத்து சாதனங்களை மிகவும் மட்டுப்படுத்தியுள்ளன. மக்கள் வேலைகளுக்கு செல்வதற்கோ, தமது உணவுப் பொருட்களை வாங்கி வீடுகொண்டு சேர்ப்பதற்கோ மிகவும் கஷ்டப்படுகின்றனர். இராணுவம் வர்த்தகத் துறையிலும தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்துவதால், தொழிற்சாலைகள மூடப்பட்டுள்ளன. பல்வேறு கடைகளிலும் வியாபாரம் சுருங்கி விட்டது. சாலை வழியாக கொழும்புக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதோ, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதோ முடியாத காரியமாகிவிட்டது

இதே சமயம் சிங்கள இராணுவத்தின தேடுதல் வேட்டைகளின்போது, வீடுகளிலிருந்து விரட்டியடிக்கப் பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

முறையான சட்ட பூர்வமான ஆட்சி வடமாகாணத்தில் கிடையாது. வட இலங்கையின் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வீதிகளில் ஒரு பொலிஸ்காரரையும் காண முடியாது. வெளியே ரோந்து புரியச் செல்ல அவர்கள் மறுக்கிறார்கள். மண் மூடை அடுக்கப்பட்ட பொலீஸ் நிலையத்துக்குள் அவர்கள முடங்கிக் கிடக்கிறார்கள். இராணுவத்தினரே வெளியே போகும் போது பெருந்தொகையாகப் போகிறார்கள். இராணுவத்தின் கட்டுக்கடங்காத தாக்குதல்களும், கொலைகளும், மிருகத்தனமான காட்டுமிராண்டிச் செயல்களும், மிதவாதிகளான தமிழர்களைக் கூட அரசு எதிர்ப்பாளர்களாக மாற்றியுள்ளது. இராணுவத்தையும் பொலிசையும தமிழர்கள் வெறுக்கிறார்கள்.

வண. பிதா. மைக்கல் சாமி (யாழ்ப்பாண கததோலிக்க விசகார் ஜெனரல்) பேசுகையில், **"யாழ்ப்பாணத்தில் நடப்பது பயங்கர ஆட்சி"** என்றார்.

யாழ்ப்பாண ஆண்டகை பேரருட் திரு. தியோகுப் பிள்ளை பின்வருமாறு கூறினார்.

"தமிழ் மக்கள் பீதியுடனும் வெறுப்புடனும் இருக்கிறார்கள். தமக்கு யாரும் உதவியில்லை என்பதை உணர்கிறார்கள். இங்கு, தமிழீழப் பிரதேசங்களில் ஜனநாயகமோ, மக்களுக்கு சமஉரிமையோ நடைமுறையில் இல்லை; தமிழர்கள் அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர்."

பலரிடம் பேட்டி கண்ட போது, ஓர் இளம் தமிழ் லிகிதர் கூறியதாவது :—

"இங்கு வாழும் ஒவ்வொருவரும பீதியுடன் இருக்கிறார்கள். எவ்வித காரணமுமின்றித் தமிழ் மக்களை இராணுவம் கொலை செய்து வருவது உங்களுக்குத் தெரியும் வீதிகளில், சாலைகளில், கண்ட கண்ட இடங்களில் எல்லாம் தமிழர்களைச் சுட்டுக கொலை செய்கிறார்கள். வசதியானவர்கள் இலங்கையை விட்டு வெளியேறுகின்றனர். என்னிடம் பணம் இருந்தால் நானும் போய் விடுவேன் இங்கு தங்கவிடப் படுபவர்கள், வயோதிபர்களும், ஏழைகளும் இளைய குழந்தைகளுமேயாவர்.

வட இலங்கையில் குழப்பங்களும், பீதி கலந்த பதட்டமுமே நிலவுகிறது. சிவில் அதிகாரங்களை வைத்திருப்பவர்கள் மனப் பலமுள்ளவர்களாக இல்லை — ஆயிரம் முதல் ஐயாயிரம் பேர் வரை, பல நூற்றுக் கணக்கான தீவிரவாத இளைஞர்கள், வடக்கு கிழககு மாகாணங்களை உள்ளடக்கிய 'தமிழ் ஈழம்' என்ற சுதந்திர நாட்டை அமைக்க உறுதி பூண்டு போராடி வருகின்றனர். பல குழுக்களாக இயங்கும் இவர்கள, சிங்களத் துருப்புக்களுக்கு எதிராகப் பயங்கரமாகப் போராடி வருகின்றனர். வீதிகளில் தரைக் கண்ணிகளை புதைத்து வைப்பது, பொலீஸ் நிலையங்களை தரைமட்டமாக்குவது, வங்கிகளிலிருந்து நிதி அபகரிப்பது, பொலீசாரைக் கடத்தல் அல்லது கொலை செய்தல், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளில் சிலவாகும்.

முற்றுகையிடுவதன் மூலமும், இளைஞர்களை விசாரணை செய்வது மூலமும், இராணுவம் திருப்பித் தாக்குகிறது, துருப்புககள் தமிழர் வீடுகளில் கொள்ளையிடுவதுடன், வீடுகளைத் தீயிடுகிறது, பல பெண்களின் நகை நட்டுகள் சிங்கள இராணுவத்தினால் களவாடப்பட்டுள்ளன. **"சிங்கள இராணுவத்தின் துவேஷப் பார்வையில் ஒவ்வொரு தமிழனும் பயங்கரவாதியாகவே படுகிறான்"** என்று அரசாங்க நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீண்ட பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்து வரும் தமிழினத்தின் தேசியப் பிரச்சினையை, சாதாரண 'பயங்கரவாத' ஒழிப்பு என்ற அளவுக்கு இலங்கை அரசு எடுத்துக்கொண்டு செயல் படுவது ஒரு பெரிய துன்பியல் சம்பவமாகும். உணர்ச்சிக் கொந்தளிப்பு உச்சக் கட்டத்தையடைய, இரு இனங்களுக்கிடையேயான மோதல்—பலமான பிரசசாரத்தையும், பிழையான தகவல்களையும், உருவாக்குகிறது.

அரசாங்கத்தின் நிலை—நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு சவாலாக விளங்கும், பயங்கரவாதிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதாகும்.

ஆனால் தமிழர்களோ, சிங்கள அரசு தனது இராணுவத்தை முழுமையாகப் பயன்படுத்தி, வரலாற்று ரீதியாக தமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை மறுத்து, தம்மை அடிமைப்படுத்த முயல்கிறது என்று கூறுகிறார்கள்.

(லண்டன் ரைம்ஸ்—
எழுதியவர்
Trevor Fishlock)

# இராணுவத்தீர்வு காண்பதிலேயே ஜெயவர்த்தனா அரசு நாட்டம்!

## 'FRONT LINE' ஏடு தலையங்கம்

தற்போதைய காலகட்டத்தில், இலங்கைத் தீவில் வாழும் 30 இலட்சம் மக்களை கொண்ட பலம் வாய்ந்த தமிழ் தேசிய இனத்தினருக்கு ஏற்பட்டுள்ள அச்சமூட்டும் சூழ்நிலையே இந்திய நாட்டின் மிகப் பெரிய அக்கறைக்கு உள்ளாகி இருக்கிறது.

சர்வ கட்சி மாநாட்டில் விவாதிக்கப்பட்ட அரசியல் தீர்வுக்கான வாய்ப்பு முறிந்து போய்விட்டது. அவ்வாறான வாய்ப்புக்கு இனி இடமே இல்லாத முறையில் சர்வ கட்சி மாநாடு, இறுதியாகப் பெரிய புண்ணையே ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள அரசியல் ஏமாற்றமும், அக்கட்சியின் இராணுவ ரீதியான ஒடுக்குமுறைக் கொள்கையுமே இந்த நிலையைத் தோற்றுவித்துள்ளது. த. வி. கூ. தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறியுள்ளதுபோல, சிங்கள அரசாங்கம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினையை இராணுவரீதியாகத் தீர்த்து வைப்பதற்கு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக இலங்கைத் தமிழர்கள் மீது, 1983 யூலை—ஆகஸ்டில் இடம்பெற்றதை விட மிகப் பெரிய அளவிலான காட்டுமிராண்டித் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணமும் அதைச் சுற்றியுள்ள தமிழர் பிரதேசங்களும், சிறைக்கூடமாக்கப் பட்டு அப்பகுதியில் வாழும் சாதாரண குடிமக்களுடைய அடிப்படைச் சுதந்திரங்கள் யாவும் பறிக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும், முறித்தெறியும் எண்ணத்துடன் அரச பயங்கரவாதம் ஏவிவிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையினால, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சிறீலங்காவுக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

திடீரென்று வெடித்துக் கிளம்புவதும், திட்டமிட்டு நடப்பதுமான சிங்கள இன வெறி காரணமாக தொல்லைகளுக்குள்ளாகி இருக்கும் இலங்கைத் தீவின் வருங் காலமே பாழடையப் போகிறது. ஜனாதிபதியும் தனது கட்சித் தலைவருமான ஜெயவர்த்தனாவுடன் விரோதித்துக் கொண்டு, வெளியேறிய சிறில் மத்தியூ கக்கத் தொடங்கியுள்ள நச்சுக் கருத்துக்கள் எதிர்காலத்தில் இடம் பெறப் போகும் இனக் கலவரங்களுக்கு அறிகுறியாகும்.

இதே சமயத்தில், இலங்கைத் தமிழர் சிக்கலுக்கு ஜனநாயக அடிப்படையில், யதார்த்த ரீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு



முழு முயற்சி எடுத்த மிகப் பெரிய நாடான இந்தியாவுடன் கொண்டுள்ள உறவைச் சீர்கெடுப்பதில் இலங்கை தானே முன்னின்றது. இந்தியாவின் நல்லெண்ண முயற்சியைக் கேவலப்படுத்தும் விஷமத்தனமான பிரசாரத்திலும் இலங்கை இறங்கியது. அதே சமயம் தமிழர்கள் மீது கொடுமைகள் தொடர்கின்றன.

அப்பாவி இந்திய மீனவர்களைத் தாக்கிக் கொலை செய்வதன் மூலம் இந்தியாவைத் தூண்டும் முயற்சியிலும் அது ஈடுபட்டுள்ளது. தமிழர் விரோத உணர்வுடன்தான், இலங்கைக் கடற்படை, இந்தியக் கடல் எல்லைக்குள் முட்டாள்தனமான துணிவுடன் நுழைந்தது.

எத்தனையோ பிரச்சினைகளுக்கு தெளிவுடன் கூடிய தீர்வு காணக் கூடிய காலமும் நேரமும் வீணே அவமாகிப் போய்க் கொண்டிருக்கின்றன.

(Frontline-ஆசிரியத் தலையங்கம் January 12-25-1985)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ மண்ணைச்சூழும் பேராபத்து!

இலங்கைத்தீவின் தமிழீழ நாட்டை ஆக்கிரமித்து அங்குள்ள அப்பாவிகளும் நிராயுதபாணிகளுமான தமிழர்களை ஆயிரக்கணக்கில் சிங்கள பௌத்த இராணுவம் சுட்டுக்கொன்றும், தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தும், தமிழர்களின் கடைகளிலும் வீடுகளிலும் வங்கிகளிலும் கொள்ளையடித்தும், தமிழர் கோவில்களையும் தேவாலயங்களையும் இடித்தும், மதத்தலைவர்களைச் சுட்டுக்கொன்றும், தமிழர் கல்விக்கூடங்களையும் நூல் நிலையங்களையும் எரித்தும், காட்டுமிராண்டித்தனமான தமிழ் இனக்கொலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதே சமயம், தமிழர்களின் பாரம்பரிய பூமியாகிய தமிழீழ மண்ணில் ஏற்கெனவே நடந்து வரும் சிங்களக் காடையர் குடியேற்றத்தை மேலும் அதிகரிக்கப் போவதாக சிங்கள சனாதிபதி ஜெயவர்த்தனாவும் யுத்த மந்திரி அத்துலத் முதலியும் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

இதற்காக ஒவ்வொரு சிங்களத் தொகுதியிலிருந்தும் 250 சிங்களக் குடும்பங்களைப் பொறுக்கி எடுக்குமாறு ஜெயவர்த்தனா தனது கட்சி எம். பி.க்களைப் பணித்துள்ளார்

இவ்வாறு பொறுக்கி எடுக்கப்படுபவர்கள் பெரும்பாலும் சிங்களக் காடையர்கள் கொலைகாரர்கள், கிறிமினல்களாக, இருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

30,000 குடும்பங்கள் இவ்வாறு பொறுக்கியெடுக்கப்பட்டதும், அவர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கப்படும் என்றும், அதன்பின் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டு, அவர்கள் தமிழர் நிலத்தில் குடியேற்றப்படுவார்கள் என்றும், சிங்கள மந்திரி அத்துலத் முதலி அறிவித்துள்ளான்.

மேற்படி சிங்களக் குடும்பங்கள் முதற்கட்டமாக கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் குடியேற்றப்படுவர் என்றும், அதற்கு அடுத்த கட்டமாக யாழ் மாவட்டத்தில் குடியேற்றம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

30,000 குடும்பங்கள் எனனும்போது ஏறத்தாழ, ஒரு குடும்பத்தில் 5 பேர் என்று பார்த்தாலும், 1,50,000 சிங்களவர்கள் குடியேற்றப்படவுள்ளனர். ஆயிரம் சிங்களக் குடும்பங்களுக்கு ஒரு புத்த விகாரை என்ற கணக்கில் 30 புத்த விகாரைகள் கட்டப்பட்டு அவற்றைப் பராமரிக்க சிங்கள புத்த சாமியார்களும் குடியேற்றப்படுவர்.

தமிழ் ஈழத்தில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவ அடக்குமுறையால், பல இலட்சக்கணக்கான தமிழர்கள் குடிபெயர்ந்து, உலகின் பல்வேறு நாடுகளிலும் அரசியல் அடைக்கலம் கோரி அகதியாகச் சென்றுள்ளனர். இச்சமயத்தைப் பயன்படுத்தி பாலஸ்தீனியர் நிலத்தை யூதர்கள் அபகரித்துக்கொண்டதுபோல, சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் தமிழர் நிலத்தை அபகரித்து ஈழத் தமிழர்களை நாடற்ற இனமாக்க முழு முயற்சியெடுத்து வருகிறது சிங்கள ஜெயவர்த்தன ஆட்சி.

விதாசாரக் குடியேற்றம் என்று இதற்கு மேற்பூச்சுப் பூசப்பட்டுள்ளது. விதாசாரக் குடியேற்ற முறைக்கு ஜெயவர்த்தனவுடன் தேனிலவு அனுபவித்த காலத்தில் அமிர்தலிங்கத்தின் தமிழர் வியாபாரக் கூட்டணியும் ஆதரவளித்தது. காலஞ்சென்ற கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை மட்டுமே இத்திட்டத்தை அன்று எதிர்த்தார்

### பட்டினிச்சாவு

இதே சமயம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உணவு கொண்டு செல்ல முடியாமல் தடுக்க சிங்கள இராணுவமே முக்கிய பாலங்களைத் தகர்த்துள்ளது உணவு தானியங்களையும் கொள்ளையடித்துள்ளது. இவ்வாறு செய்துவிட்டு, தமிழீழ விடுதலைப் போராளிகள் மேல் இதற்கான பழியைப் போட்டு, ''தீவிரவாதிகளின்'' அழிவுச் செயல்களினால், யாழ்ப்பாண மக்களுக்கு உணவு சப்ளை செய்ய முடியவில்லை என முதலைக் கண்ணீர் வடிக்கிறது சிங்கள அரசு.

தமிழ் மக்களைப் பட்டினிச் சாவுக்கு உட்படுத்துவதன் மூலம், அவர்களின் சுதந்திர தாகத்தை முறியடித்துப் பணிய வைப்பதும், தமிழீழ விடுதலைப் போராளிகள் மீது வெறுப்பு ஏற்படுத்தவுமே சிங்கள அரசு வேண்டுமென்று இவ்வாறு செய்கிறது. யாழ்ப்பாணத்தை ஒரு BIAFRA ஆக்க முயற்சிக்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அட்டன் நாஷனல் வங்கியைக் கொள்ளையிட்டதும் சிங்கள இராணுவமே என்பதை யாழ்ப்பாண மக்கள் அறிவார்கள்.

### தமிழின சங்காரத்துக்கு 20 கோடி டாலர்!

உலக நாடுகள் இலங்கைத் தீவின் அபிவிருத்திக்கென ஜெயவர்த்தன அரசுக்கு, நன்கொடையாகவும் உதவியாகவும், கடனாகவும் கொடுத்த பணத்தில் ''பாதுகாப்புக்கு'' என்ற திரை மறைவில் தமிழர்களைக் கொல்வதற்கு ஆயுதம் வாங்கவும், ஏனைய சிங்கள இராணுவச் செலவுக்குமென இருபது கோடி அமெரிக்க டாலர்களை அந்த அரசு இவ்வாண்டு ஒதுக்கியுள்ளது.

ஒரு சிங்கப்பூர் நிறுவனம் மூலம் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 12 நவீன ஹெலிகாப்டர்களை சிறீலங்கா அரசு வாங்கியுள்ளது. ஏற்கெனவே 12 ஹெலிகொப்டர்கள் சிங்கள அரசிடம் உண்டு. இலங்கை இராணுவத்தை வலுப்படுத்த சீனா, இஸ்ரேல், மற்றும் அமெரிக்க நாடுகள் முன்வந்துள்ளன. இஸ்ரேல் இரண்டு ரோந்துப் படகுகளை சிங்கள அரசுக்கு கொடுத்துள்ளது. எல்லாமாக சீனாவின் ரோந்துப்படகுகள் இப்போது ஜெயவர்த்தன அரசிடம் உண்டு.

சிங்களக் காடையர்களை ஒவ்வொரு இரண்டு மாதத்துக்கும் 2000 பேர் என்ற அடிப்படையில் இராணுவப் பயிற்சி அளித்து ஆயுதம் கொடுத்து தமிழர்களைக் கொலை செய்யவும் கற்பழிக்கவும், தமிழீழப் பகுதிக்கு அனுப்புவதற்கு சிங்கள அரசு தீர்மானித்துள்ளது.

தமிழர்களை சிங்களவர்களின் கைகளில அடிமைகளாக ஒப்புக் கொடுத்துவிட்டு வெளியேறிய பிரிட்டிஷ் அரசு, இப்போது தமிழர்களை கொலை செய்வதற்கு சிங்களவருக்கு ஆயுதமும் கொடுக்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 40 புதிய சிங்கள ராணுவ முகாம அமைக்கப்பட்டுள்ளது.

# சிங்கள இராணுவப் படை குண்டு வெடித்துச்சங்காரம்!

# த.ஈ.வி. இயக்கத்தின் சாதனை!

தமிழீழத்தை ஆக்கிரமித்து தமிழர்களைச் சுட்டுக் கொனறும் சித்திரவதை செய்தும், தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தும் வரும் சிங்கள இராணுவம் கொழும்பை நோக்கிச் சென்ற ரயில் வண்டியொன்று கண்ணிவெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. இதில் ஏராளமான இராணுவத்தினர் உயிரிழந்தனர். இச் சம்பவம் 19-1-85 சனியிரவு எட்டரை மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து எழுபது கிலோ தொலைவிலுள்ள முறிகண்டி என்னும் இடத்தில் நடைபெற்றது.

குட்டிமணி, தங்கத்துரை போன்ற தியாகிகள் உருவாக்கிய தமிழீழ விடுதலை இயக்கத்தின் கொரில்லாக்களே இந் நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் இறந்தவர்களின் தொகை பற்றி பல்வேறு கணக்குகள் தரப்பட்டுள்ளன.

சிங்கள தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் ''உத்தியோக பூர்வ'' புள்ளி விபரப்படி இறந்த இராணுவத்தினர் தொகை 38 ஆகும்.

23-1-1985 'நியூஸ்ருடே' ஏட்டுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தினர் கொடுத்த கணக்கின்படி இறந்த இராணுவத்தினர் தொகை 240 ஆகும், லண்டன் பி.பி.சி. செய்தியின்படி இறந்த இராணுவத்தொகை 90.

'பெசண்ட்' நகரிலுள்ள தமிழ் தகவல் மையம் கொடுத்த செய்தியின்படி உயிரிழந்தோர் தொகை 240. சென்னையிலுள்ள 'புரொட்டெக்' அளித்த தகவலின்படி இறந்த இராணுவத்தொகை 271 ஆகும்.

தொகையில் மாற்றங்கள் இருந்த போதிலும, சிங்கள இராணுவத்துக்கு இத்தாக்குதல் ஒரு பெரியப்பேரிழப்பே யாகும். இதைச் செய்து முடித்த விடுதலை வீரர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகத் தரைக் கணணிகளைப் புதைத்து வைத்து வெடிக்கச் செய்வதன் மூலம் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் இராணுவத்தையும், அவர்களது கவச வண்டி, மற்றும் டிறக்குகளையும் அழித்து வருவது தெரிந்ததே. யாழ்மாவட்ட இராணுவ பிரிகேடியர் கூட விடுதலைப் புலிகளால் இவ்வாறு கொல்லப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மேற்படி தாக்குதல்களையெல்லாம் ''தனிநபர் பயங்கரவாதம்'' என்று வர்ணித்துக் கண்டித்து வந்த 'ரொலோ', ஈழமககள் புரட்சிகர விடுதலை முன்னணி, போன்ற இயக்கங்கள் எல்லாம் இப்போது பிரபாகரன் முன்னெடுத்த போராட்டப் பாதையில் செல்வதன் மூலம், அவ்வழியே சரியென ஏற்றுக் கொண்டுள்ளதானது, விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஓர் இணைப்பு ஏற்பட சாதகமாக அமைநதுள்ளது.

இத்தாக்குதலின் போது 13 தொடர் வண்டிகளில் 11 வண்டிகள் சேதமடைந்தன. சிங்கள அரசுக்கு 5 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது.

### இராணுவம் பழிவாங்கல்

ரயில் கவிழ்ப்பில் சிங்கள ராணுவ காடையர்கள் கொல்லப்பட்டதை யடுத்து. அதில் தப்பிய சிங்கள இராணுவத்தினர், வேறோர் வண்டியில் திரும்பி யாழ்ப்பாணம் சென்றனர். அப்போது வழியெல்லாம் கண்டபடி சுட்டுக் கொண்டே சென்றனர். பரந்தனில் 20 தமிழர்கள் வீடுகள் கொளுத்தப்பட்டன. வீட்டுக்குள விளையாடிக் கொண்டிருந்த 5 வயதுத் தமிழ்க் குழந்தையொன்றையும் சுட்டுக் கொன்றனர். துணுக்காயிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ்ஸை மறித்துப் பயணிகள் மீது சுட்டனர். இதில் 45 வயதுடைய ராஜதுரைசெல்லம்மாள் என்னும் பெண் கொல்லப்பட்டார். கந்தையா குமாரசுவாமி (65) சிவபாத சுந்தரம (40) பொன்னுத்துரை (40) ஆகியோரும் சிறு குழந்தையொன்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்